
www.padippakam.com

நவம்பர் '96

விலை ரூ.4/-

# தாமரை



www.padippakam.com




அக்டோபர் மற்றும்

நவம்பர் புரட்சியின் நினைவாக...

படிப்பகம்

www.padippakam.com




கட்டுரை

திலகவதி

ஐசக் அருமைராஜன்

கதை

கே.டானியல்

எஸ். கணேசராஜ்

குமார்.கே

கவிதை

இந்திரன்

பா.செயப்பிரகாசம்

பாட்டாளி

மலர்கள் ராஜ

ஸ்டேன்லி

ஹரணி

நூல் விமர்சனம்

எஸ். தோதாத்ரி

பா. செயப்பிரகாசம

இரா. இலட்சுமணன்

எஸ்.குரு

கிருஷ்ணகோபாலன்

சித்திரம்

சந்ரு

மருது

விஸ்வம்

மனோகர்

ஸ்ரீதர்

படிப்பகம்

www.padippakam.com

## மெட்டுக்கட்டி வரும்
# தட்டுக்கெட்ட சிந்தனைகள்

திரைப்படப் பாடல்கள் மக்களிடம் பெற்றுள்ள செல்வாக்கும் அது அவர்கள் வாழ்வு நெறியின் மீது செலுத்தும் ஆதிக்கமும் நாம் நினைப்பதைக் காட்டிலும் வலிமையானவை; கூர்மையானவை; ஆழமானவை.

அதனாலேயே சமூகம், மக்கள் மேன்மை ஆகியவை பற்றி அக்கறையும் கவலையும் கொள்ளும் எவரும் திரைப்பட பாடல்களைக் குறித்து கவலையும் அக்கறையும் கொண்டாக வேண்டியிருக்கின்றது.

மெட்டுக்குப் பாட்டெழுதுவதன் கஷ்டம், நல்ல பாடல்களுக்கு வழிவிடாத கதையம்சம் என்றெல்லாம் நீக்குத்தாக்கான சாக்குப் போக்குகள் சமாதானமாகச் சொல்லும் பாணி கலைஞர்களின் கைகளில் என்றும் தீராதிருக்கிற ஸ்டாக்.

''சினிமா என்பது என்ன தமிழ் வளர்ச்சிக் கழகமா? அல்லது என் புலமையைச் சோதிக்கின்ற சங்கப்பலகையா? தரை டிக்கெட்டுக்களைக் குஷிப்படுத்தத்தான் எனக்குக் காசு கொடுக்கிறாங்க. அந்தத் தரை மகாஜனங்களுக்கு,

> ''தில்லா டாங்கு டாங்கு
> திருப்பிப் போட்டு வாங்கு'' என்று எழுதாம
> ''வண்டார் குழல் பூச்செண்டாட
> அழகு கொண்டாட'' என்றா எழுத முடியும்?

என்று கேட்ட தஞ்சை ராமையாதாசும் தன் இறுதிக் காலத்தில், தான் பாட்டு எழுதாமல் தன்பாட்டுக்கு எழுதியதைச் சொல்லி வருந்தியதை தமிழ்த்திரை வரலாறு பதிவு செய்து வைத்திருக்கின்றது. இதை இன்றைய பாடல் ஆசிரியர்கள் புரிந்து கொள்வது அவர்களுக்கும், தமிழர்க்கும், தமிழுக்கும் நல்லது செய்யும்.

திரைக்கதையை நகர்த்திச் செல்ல எவ்விதத்திலும் உதவாத, அவசியமில்லாத இந்தப் பாடல்கள், மக்கள் ரசிக்கிறார்கள் அல்லது மக்களுக்குப் பழக்கமாகிவிட்டது அல்லது மக்கள் எதிர்பார்க்கிறார்கள் என்கிற காரணத்துக்காகவே படங்களில் இடம் பெறுகிறது என்பதை இப்பாடல் ஆசிரியர்கள் நன்கு உணரவேண்டும். அப்படி உணர்ந்தால்,



படிப்பகம்

www.padippakam.com

தங்கள் வளர்ச்சிக்கும், செல்வத்துக்கும், செல்வாக்குக்கும், தாங்கள் சாப்பிடும் சாப்பாட்டுக்கும், வசிக்கிற மாளிகைக்கும், பயணம் செய்கிற காருக்கும், காருக்குப் போடுகிற பெட்ரோலுக்கும் ஆதாரமாக இருக்கிற மக்களுக்கு எவ்வளவு கடன் பட்டிருக்கிறார்கள் என்ற பிரக்ஞை தோன்றும்.

*''கொட்டப்பாக்கும் கொழுந்து வெத்தலையும்*
*போட்டா வாய் சிவக்கும்*
*மச்சான் நீயும் மச்சினி நானும்*
*தொட்டா தூள் பறக்கும்''*

என்பது போன்ற விரசங்களைத் துப்பும் முன் அவர்களின் பேனா சற்றே நிதானிக்கும்- நாணித் தலை நிமிரும்.

சினிமாவுக்குப் பாட்டெழுதுபவர்களுக்கு அவற்றின் மூலம் மக்கள் மனதிலே லட்சியங்களை விதைக்கிற கடமை இருக்கிறது. மக்கள் வாழ்க்கைக்கு உதவாத சினிமாவை தீக்குச்சிகளுக்கு தின்னத் தரத் துடிக்கிற இளைஞர்கள் இன்னும் செத்துவிடவில்லை. அவர்கள் லட்சியங்களும் அவ்வாறே.

சில்லறை சேர்ப்பதையே நோக்கமாகக் கொண்டவர்களா சினிமாப் பாடல் ஆசிரியர்கள்? கேளிக்கை படைப்பதும் கிளுகிளுப்பூட்டுவதும் தானா அவர்களது வேலை? இந்தக் காரியங்களை இவர்கள் செய்ய நேர்ந்ததற்கான காரணங்களை அழகிய சொற்பிரயோகங்களுடன் தருவதனாலும், அறிவுக்குகந்த விதத்தில் நியாயப்படுத்துவதாலும் இன்றைய பாடலாசிரியர்கள் மீது சுமத்தியிருக்கின்ற பழி அகன்று விடுமா? எல்லாக் காலங்களிலும் பாடலாசிரியர்கள் இப்படித்தான் இருந்தார்களா?

தமிழ்த் திரைப்பாடல்களின் முதல் குரலாக ஒலித்த மதுரகவி பாஸ்கரதாஸ் அதிகப் படிப்பில்லாதவராக இருந்தாலும் தன் காலத்தின் தீமைகளை எதிர்த்துக் குரல் கொடுப்பது கலைஞனின் தர்மம் என்றே கருதினார். தேச பக்தி, தெய்வ பக்தி இவை தவிரவும் தொழிலாளர் நிலை பற்றி,

*'ஓடோடிப் பாடுபட்டு உழைத்தேன்*
*ஓகோபேய்ப் பிழைப்பு பிழைத்தேன்'*

என்று சுயவிமரிசனம் செய்து கொள்ளும் தொழிலாளி, கடைசியாக

திலகவதி



படிப்பகம்

www.padippakam.com

''காசெல்லாம் யாருக்கோ போகுது
யோசிக்கத் துக்கமே ஆகுது''

என்று முடிப்பதாக எழுதியிருந்தார்.

1915-ல் பாட்டெழுதத் தொடங்கிய அவர் அந்தக் காலத்திலேயே, பொருந்தா மணத்தைக் கடுமையாகச் சாடியிருக்கிறார்.

''மவுசாகச் சிறுபெண்ணை
மணம்புரியும் மாப்பிள்ளையை
மண்ணைத் தோண்டிப் புதைக்க வேணும்
எண்ணெய் ஊற்றி எரிக்க வேணும் சகியே''

என்று தீக்கங்குகளை வார்த்தைகளாகக் கோர்த்துக் கொட்டியிருக்கிறார். இன்றைய படித்த பாட்டுக்காரர்களோ, ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள ஒருவன் ஆணாக மட்டுமே இருந்தால் போதுமானது என்கிற பாமரச் சிந்தனையையே தங்கள் பாடல்களில் கூச்சமின்றி வெளிப்படுத்துகிறார்கள்.

படிப்பில்லாதவன் என்பதால் கதாநாயகனை மணக்கத் தயங்கு பவளை எண்ணி அவன் பாடுவதாக வரும் ''தாய்மாமன்' படப்பாடல்.

''காளை மாட்டுக்கு காம்பெதுக்கு
கன்னி கழிக்க படிப்பெதுக்கு
சிங்கம் நடக்க செருப்பெதுக்கு
சேலை தொடத்தான் படிப்பெதுக்கு'' என்கிறது.

இருபத்தோராம் நூற்றாண்டின் நுழைவாயிலில் இப்படி ஒலிக்கிற அபத்தத்துக்கு எங்கே போய் முட்டிக் கொள்வது?


விசாரித்தால்...அது கதாபாத்திரத்தின் குரலென்ற ''அறிவார்ந்த'' பதில் கிடைக்கும். கதாபாத்திரங்கள் படைப்பாளனின் கைப்பதுமைகளே யல்லவா? அப்படியிருந்தால் தானே ராஜாக்கள் நடமாடும் கதையிலேகூட பாடலாசிரியர் லட்சுமணதாஸ்,

உழைப்பதிலா இன்பம் உழைப்பைப் பெறுவதிலா இன்பம்
உண்டாவதெங்கே சொல் என் தோழா?
உழைப்பவரே உரிமை பெறுவதிலே- இன்பம்
உண்டாகுமென்றே சொல் என் தோழா
கல்வி கற்றோம் என்ற கர்வத்திலே இன்பம்
கண்டவருண்டோ சொல் என் தோழா?



படிப்பகம்

www.padippakam.com



*கல்லாத பேரையெல்லாம் கல்வி பயிலச் செய்து*
*காண்பதில்தான் இன்பம் என் தோழா''*

என்று பொதுவுடைமை பறைசாற்றும் பாடலைத் தந்தார்.

திராவிட நாடு கோரிக்கை வலுப்பெற்றிருந்த காலத்தில் வந்த பல படங்களும் கதைப்போக்கையொட்டிநின்ற கால, தேச வர்த்தமானங் களைத்தாண்டி தங்களுடைய கட்சியின் கொள்கைகளையே பேசியது என்பது சமீபத்திய வரலாறு. 'மாலையிட்ட மங்கை' போன்ற சமூகப் படத்திலே,

*''சிங்களத் தீவின் கடற்கரையை -எங்கள்*
*செந்தமிழ்த் தோழர் அழகு செய்தார்*
*எகிப்திய நாட்டின் நதிக்கரையில் -எங்கள்*
*இளம் தமிழ் வீரர் பவனி வந்தார்''*

என்று கதாநாயகன் பாடுவதாக கண்ணதாசன் பாடல் அமைத்திருக் கிறார்.

இது எப்படிச் சாத்தியப்பட்டது? இதற்கான முன்னோடிகளாக விஸ்வநாததாஸ் போன்றோர் இருந்ததால்தான் இது சாத்தியப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் தடியடி, அடி, உதை, சிறைவாசம் போன்ற சொல்லொணாக் கொடுமைகளுக்கு நடுவிலும் தாங்கள் கையாண்ட கலை வடிவங்களின் வழியே சமூகத்துக்கு நல்லது எதுவோ அதைத்தான் சொல்ல வேண்டும் என்ற உத்வேகத்துடன் செயல் பட்டவர்கள் விஸ்வநாததாஸ் போன்றவர்கள். தேச பக்திப் பாடல்க ளைப் பாடியதற்காக ஒருதடவையல்ல இரண்டு தடவையல்ல இருபத்தியொரு தடவைகள் சிறை சென்றவர் அவர் என்பதையும் நாம் இங்கு நினைவு கூற வேண்டும்.

இத்தனைக்கும், அந்த நாடகக் கலைஞர்கள் மிகக் குறைவான படிப்பறிவே உடையவர்கள். சிலர் கேள்வி ஞானத்தால் மட்டுமே கலைஞர்களாக ஆனவர்கள். போராளிகளாக வாழ்ந்தவர்கள். நாடக அரங்கினுள் நுழையும்போதே பகத்சிங் போன்ற தலைவர்களின் உருவப்படம் பதித்த பேட்ஜ்களை அணிந்துகொண்டு பிரவேசித்த வர்கள்-ஏகாதிபத்திய எதிர்ப்புக் கனலைக் கொழுந்துவிட்டெரியச் செய்தவர்கள்- பாமர மக்களை வீறுகொண்டு எழச்செய்தவர்கள்.

'வள்ளி திருமணம்' நாடகத்தில் தினைப்புனம் காவல் காக்கும் வள்ளி,

> **''தேம்ஸ் நதிக்கரையிலே குஞ்சு பொரித்து**
> **இந்தியா எங்கும் சுற்றிப் பறந்து திரிந்து**
> **இன்னல் பல செய்யும் வெள்ளைக் கொக்கே''**

என்று அரசியல் வண்ணம் பூசி கொக்கை விரட்டுவாள்.

கொதித்தெழும் மக்களின் மீது பாய்ந்த அடக்குமுறைச் சட்டத்தை எதிர்த்து அந்த நாடக மேடைக் கலைஞர்கள் குரல் கொடுத்தார்கள்.

> **''சிறைக்குள்ளிருந்து மனமே களிப்படையும்**
> **சிலர்க்கில்லை விசனமே -எப்போதுமே.**
> **கலெக்டரும் கடவுளல்ல -அடிமைப்போலீஸ்**
> **கான்ஸ்டபிள் எமனுமல்ல- உயிரைக் கொல்ல''**

என்று வீரஞ்செறிந்த ஆவேசத்துடன் ஒருமிக்கக் குரல் கொடுத்தார்கள்.'

அடிமைத் தனம், வறுமை, அறியாமை, பஞ்சம், பிணி, பட்டினி ஆகியவற்றிலேயே உழன்ற அந்த பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழர்கள் ரியலிசம், கண்டினியுட்டி ஆகியவை பற்றிய கவலையில்லாமல் இத்தகைய் நாடகங்களைப் பார்த்து, புரிந்துகொள்ள வேண்டியவற்றைப் புரிந்து கொண்டார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

தினைப்புனத்தில் தேம்ஸ் நதிக்கொக்குகள் எப்படி வந்தன என்று அவர்கள் திண்டாடிப்போகவில்லை. அரிச்சந்திரன் நாடகத்தில் பகத்சிங்கும், பஞ்சாப் படுகொலையும் எப்படி வந்தன என்று அவர்கள் திணறிப் போகவில்லை.

அந்த வள்ளி காவல் காத்தது வெறும் தினைப்புனம் அல்ல; தேசம்.

துரத்தித் துரத்தி அடித்தது பறவைகளை அல்ல; ஏகாதிபத்தியக் கொக்குகளை என்பது மக்களுக்கு நன்கு விளங்கியது.

பாத்திரப் படைப்பில் கவனம் செலுத்துவதான பாவனையை யார் நம்புவார்? பிரசவித்திருக்கிற தங்கையையும், அவள் கணவனையும் குறித்து உடன் பிறந்தானும், உற்றாரும், உறவும் யதார்த்தத்தில்,

*''பச்ச உடம்புக்காரி பார்த்து நடக்கச் சொல்லுங்க*
*பிள்ளைக்கு தாய்ப்பால தூக்கிக்கொடுக்கச் சொல்லு*
*மச்சான திண்ணையிலே போத்திப் படுக்கச் சொல்லு''*

என்று சொல்லுகிற அநாகரீகத்தை எந்த யதார்த்தத்தில் சேர்த்துக் கொள்வது? இது எந்தப் பாத்திரத்தை செதுக்குகிற, சித்தரிக்கிற சரியான படைப்பு?

'பெண்' எனும் கருத்தாக்கத்தின் மீது எவ்வளவு இழிவான சிந்தனைகளை இன்றைய சினிமாப் பாடல்கள் சுமத்துகின்றன. பெண் வாழ்வின் எல்லாப் படிநிலைகளிலும் அவளை எவ்வளவு கேவலத்துக்கு ஆளாக்குகின்றன. எந்தெந்த எண்ண வீச்சுக்கள் எல்லாம் பெண் வாழ்வின் துயரை நிலைப்படுத்துமோ அவற்றையே மீண்டும் உரத்துச் சொல்கின்றன இச்சினிமாப் பாடல்கள்.

பெண்களின் கண்ணீர் மறைய வேண்டும். அவர்களும் மானுடத்தின் சரிபாதி அங்கமாக வாழ வேண்டும் என்று கருதிய கவிஞன் என்பதால்தான் பாரதி,

**''நாணமும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்**
**ஞான நல்லறம் வீர சுதந்திரம்**
**பேணு நற்குடிப் பெண்களின் குணங்களாம்''**

என்றான்.

*''அச்சமும் நாணமும் இல்லாத பெண்கள்- அழகிய தமிழ்நாட்டின் கண்கள்''*

என்றார் பாரதிதாசன்.



படிப்பகம்

www.padippakam.com

ஆனால், இந்தத் துணிச்சலான கருத்து சொல்லப்பட்டு ஏறக்குறைய இரண்டு அல்லது மூன்று தலைமுறைக் காலத்துக்குப் பின் இன்றோ,

*''நான் கூச்சம் மிகுந்த சங்கத் தமிழ்நாட்டுப்பொண்ணு*
*என்னை மட்டும் பார்க்கும் பொண்ணு நானு*
*குளத்தில குளிக்கையில் கொக்கு என்னை பார்க்குமின்னு*
*குத்தவச்சி குளிக்கும் பொண்ணு நானு*
*தாய் வழியே நாணம் கண்ட தமிழச்சி நானு*
*அந்தசரித்திரத்து கண்ணகிக்கு தங்கச்சி நானு''*

என்கிறது 'தமிழச்சி' படப்பாடல்.

பெண் வாழ்வின் மீது எத்தகைய எதிர்பார்ப்புகளை சுமத்துகிறது இப்பாடல்?

முற்போக்கு என்பதும் விஞ்ஞான மயம் என்பதும் மொழியில் எத்தனை எழுத்துக்கள் இருக்கின்றன என்பதை எண்ணிச் சொல்வதிலும் உடம்பில் உள்ள நரம்புகளைப் பற்றிய புள்ளி விவரங்களை அள்ளித்தெளிப்பதிலும் இல்லை. அது-

எதிர்காலத்துக்குரியவர்களாக மக்களை இன்றே தயாரிக்க வேண்டிய கலைஞன் தனது கடமையைப் புரிந்துகொள்வதில் இருக்கிறது.

*'அச்சம், மடம், நாணம், அவளுக்காம், அவை தவிர்த்த*
*மிச்சமிருக்கின்ற வெறியெல்லாம் இவனுக்காம்'*

என்று தணிகைச் செல்வன் கசந்து சொல்லியதைப் போல கற்பையும், மானத்தையும் பெண்களுக்கு மட்டும் உரியதாக்கும் இத்தகைய பாடல்கள் என்னதான் சொல்கின்றன? ஆண்களுக்கு அவை தேவையில்லையென்றா?

*விடிகாலை விண்ணழகு,*
*விடியும் வரை பெண்ணழகு*
*தமிழுக்கு 'ழ' அழகு*
*தலைவிக்கு நான் அழகு''*

என்றும்

*''அவரைக்குப் பூ அழகு, அவருக்கு நான் அழகு''*

என்றும் வர்ணனை செய்யப்படும் பெண்ணின் அழகு பரிதாபத்துக்குரியது.

'விடியும் வரை பெண்ணழகு' என்பது விரசமில்லையா? அத்தகைய



படிப்பகம்

www.padippakam.com

எண்ணம் ஆணின் கண்ணியத்தைக் குலைப்பதல்லவா? அவரைக்குப் பூ அழகு என்பதில் 'அ' வும் 'அ'வும் பொருந்திப் போவது தவிர வேறு என்ன பிரமாதமான அழகு இருக்கிறது? என் கண்ணுக்கு அவரைப் பூ அழகுதான் என்று யாராவது விம்பு பிடிக்கலாம். ஆனால் அவரைக்கு காய்தான் அழகு என்பதே பசித்தவன் காணும் பயன்பாடாகும். அவரைக்கொடி வளர்த்த விவசாயியின் கண்ணுக்கு அழகாகத் தெரிவது அறுவடைக்குப்பின் அம்பாரமாகக் கிடக்கும் அவரைக்காய்தானே தவிர, பூ அல்ல.

இந்த எளிய விஷயம் பின்னுக்குத் தள்ளப்பட்டு அழகு, அழகு என்ற வார்த்தையை அடுக்கிச் செல்லும் முயற்சியில் 'சிந்தனை' வழுக்கி தடம் மாறிப் புரண்டு விடுகிறது பாடலாசிரியருக்கு. பெண்களை உடல் பரமாக வர்ணித்து, உறுப்பு நலம் உரைக்கும் புளித்துப்போன பாணியேயன்றி இது வேறென்ன?

பெண்ணை ஓர் உயிராக மதிக்கிற ஒரு மனிதன் ஒரு போதும் எவ்வளவு வேடிக்கையான மனநிலையிலும்,

*''அழகுப் பெண்ணின் தாயார் என்றால்*
*அத்தை என்றே அர்த்தம்''*

என்று கூறமாட்டான்.

*''அடி பூத்து நிக்கற பாப்பா*
*உன்னை பொண்ணு கேட்டா தப்பா*
*ஒன்னை நெனச்சுப் படுத்திருந்தேன்*
*கிழிஞ்சு போச்சு ஜிப்பா''*

என்று ஓர் இளைஞன் இளம் பெண்ணை நோக்கிப் பாடுவது யாருக்காவது கௌரவம் தருவதாகுமா?

முன்னாளில் வள்ளுவரும், பின்னாளில் கவிஞர் சுரதாவும் சொன்னது போல மலரினும் மெலிதான காதல் நமது திரைகவிஞர்கள் கையில் இந்தப் பாடுபடுகிறதே.

பாடலாசிரியர் பூமிபாலகதாசைப் போல

*''செங்கற்பவள விரலோடு கால்கள் தெரிகுவது-ஓர்*
*தங்கப்பதுமை சாய்ந்தே கிடந்த தகைமையதே''*

*என்று சொல்லாவிட்டாலும் பரவாயில்லை.*

*''நிலவின் நிழலோ உன்வதனம்- புது*



படிப்பகம்

www.padippakam.com

*நிலைக்கண்ணாடியோ மின்னும் கன்னம்*
*மலையில் பிறவா மாமணியே -நான்*
*கொய்யும் கொய்யாக்கனியே''*

கவிஞர் சுரதாவைப் போல கவிதையாக இசைக்காவிட்டாலும் பரவாயில்லை.

*''ஆடைகட்டி வந்த நிலவோ- கண்ணில்*
*மேடைகட்டி ஆடும் எழிலோ -குளிர்*
*ஓடையில் மிதக்கும் மலர்*
*ஜாடையில் சிரிக்கும் இவள்*
*காடுவிட்டு வந்த மயிலோ- நெஞ்சில்*
*கூடு கட்டி வாழும் குயிலோ''*

என்று பட்டுக்கோட்டை பாணியில் கௌரவப்படுத்தாவிட்டாலும் பரவாயில்லை.

*''வெள்ளாமை நீதான் வெள்ளாடு நான்தான்''*
*என்று தீனியாக்காமல்*
*''கொங்குநாட்டுக் கிணறுபோல*
*குமரி மனசு ஆழம்தான்*
*கொடைக்கானல் மூங்கில்போல*
*அய்யா கை நீளம் தான்''*

என்று கொச்சைப்படுத்தாமலாவது இருக்கலாமே.

நல்ல கலைஞன்,தன்க்கு வாய்த்திருக்கிற வடிவங்களின் மூலம் மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான கருத்துக்களையே சொல்வான். இளையராஜா சகோதரர்கள் மாட்டு வண்டி போகாத ஊர்களுக்கும் தங்கள் பாட்டுவண்டியை அனுப்பிக் கொண்டிருந்த அந்தக் காலத்திலே அவர்களுடைய மூத்த சகோதரர் பாவலர் வர்தராஜன் கருத்தடைச் சாதனமாக பயன்படுத்தப்பட்ட ''லூப்'' ஏற்படுத்தும் உடல் நலக்கோளாறுகளை உணர்ந்து அவற்றை எதிர்த்தார். அதே உணர்வை மக்கள் மனதிலும் தூண்டினார். அதற்காக அவர் ஏற்றுக்கொண்ட மெட்டு அன்றைய மெகாஹிட்டான 'ஆராதனா' படப்பாடல் 'ரூப்பு தேரா மஸ்தானா' தான். அதனையே வரதராஜன்

*''லூப்பு தர்றான்*
*சரிதானா*
*மாட்டலேன்னா*



படிப்பகம்

www.padippakam.com

விடறானா''

என்று பாடினார்.

இன்றைய கவிஞர்களின் கம்ப்யூட்டர் காலத்து சிந்தசைசர் இசையோ,

''அஜக்குன்னா அஜக்குதான்
குமுக்குன்னா குமுக்குத்தான்''
என்று தஞ்சை ராமையதாஸ் காலத்து
''ஜாலிலோ ஜிம்கானா'' வையே தலைகுனியச் செய்கிறது.
''தங்கமே தமிழுக்கில்லை தட்டுப்பாடு'' என்ற வீராப்பு ஒரு புறம்.
''ஜுராசிக் பார்க்கில் நின்று சுகமான ஜோடிகள்
ஜாஸ் மியூசிக் பாடி வருது
பிக்காசோ ஓவியந்தான் பிரியாமல் என்னுடன்
டெக்சாசில் ஆடி வருது கவ்பாயின் கண்பட்டதும்
பிளேபாயின் கை தொட்டதும்
உண்டான செக்சானது ஒன்றாக மிக்சானது''

என்று செந்தமிழ் கொஞ்சும் சந்தங்களில் துள்ளும் பாடல் மறுபுறம்.

இளைஞர்களின் ''இன்னொரு தேசிய கீதமாக'' இன்றைக்கு ஒலிப்பது ''டேக் இட் ஈஸி பாலிசி'' தான். ''கொலை வாளினை எடடா மிகு கொடியோர் செயல் அறவே'' என்று கொதித்த பாரதிதாசன் போன்ற கவிஞர்கள் கற்பனை செய்ய முடியாத அற்புத மந்திரம் இன்றைய இளைஞர்களின் நாவிலும், மனதிலும், மூளையிலும் பதிந்திருக்கின்ற 'டேக் இட் ஈஸி பாலிசிதானே?, அதிலும் முக்கியமாக எதைச் சுலபமாக எடுத்துக் கொள்வதாம்?

''பக்கத்து சீட்டில் பாட்டி உட்கார்ந்தா டேக் இட் ஈஸி பாலிசி'' யாம். அதுசரி இது நகைச்சுவை என்றால் அவலச்சுவை எது?

''அச்சம் என்பது மடமையடா''
''ஏர் முனைக்கு நேர் இங்கு எதுவுமே இல்லை''
''தூங்காதே தம்பி தூங்காதே''
''மனுசனை மனுசன் சாப்பிட்றான்டா தம்பிப்பயலே இது
மாறுவதெப்போ தீருவதெப்போ நம்ம கவலை''

என்றெல்லாம் ஒலித்த பாடல்கள் எத்தனையோ மன மாற்றங்களைத் தோற்றுவித்திருக்கின்றன.

இன்றைய பாடல்கள் காட்டும் வாழ்க்கை- மீன் பிடித்து மீண்டும்



படிப்பகம்

www.padippakam.com

ஆற்றில் விடும் வெட்டித்தனத்தையும, தங்க மழை தானாய் பொழிய வேண்டும் என்ற ஆதங்கத்தையும், நிலவில் மழை பெய்வதும், சூரியனுக்குச் சுண்ணாம்பு அடிப்பதும், நட்சத்திரங்களுக்குப் பெயிண்ட் பூசுவதும், வானவில்லை கொசுவம் வைக்கவுமான அதீத ரொமாண்டிக் கற்பனைகளை இளைஞர்கள் மனதில் வளர்த்து, யதார்த்தத்திலிருந்து அவர்களை அந்நியப்படுத்தி, நிஜ வாழ்வை எதிர்கொள்ளும் வலிமையற்றவர்களாக்கி, அவர்களை கனவுகளுக்குள் போட்டுக் கரைக்கிற மன்னிக்க முடியாத குற்றத்தைச் செய்கின்றன.

இன்றைய கவிஞர்களின் பாடல்களில் நல்ல பாடல்கள் இல்லவே இல்லையா என்று கேட்கலாம். இருக்கும். சிலவற்றைப் பட்டியல் போட்டுக் கூட காட்டலாம். ஆனால் அதற்கு மாறான பட்டியல் அதைக்காட்டிலும் நீளமாக இருக்கிறது. அவைகள் நாகரீகமான சபையில் மேற்கோள்காட்டப்படக் கூட அருகதை இல்லாதவை. இங்கே குறிக்க வேண்டி வந்த சில பாடல்களுக்காகவே நான் கூசிப் போகிறேன். ஆயினும் கடமை கருதி அதைச் செய்துள்ளேன்.

பெண்களைக் கேலி செய்து பாடும் பாடல்களும் அவ்வாறே.

**''ஆடவாங்க அண்ணாத்தே''**
**''பாரப்பா பழனியப்பா''**
**என்று கேலி செய்த கதாநாயகர்கள்**
**''கட்டவண்டி கட்டவண்டி''**
**என்ற காலத்தைக் கடந்து**
**''ஓரங்கா ஸ்ரீலங்கா கொப்பரத் தேங்கா''**

என்று தற்காலம் வரை அதே பாணியைத்தான் கையாளுகிறார்கள்..

இத்தகைய பாடல்கள் பெண்கள் மீதான பாலியல் ரீதியான தாக்குதலின் தொடக்கம்.

இது ஒரு கலாச்சாரக் கற்பழிப்பு. கும்பல் கும்பலாகத் தெருவில், கல்லூரி வாசல்களில் படையெடுப்பு நடத்தி பெண்களை விமரிசித்துப் பாடும் விடலைகளை உற்பத்தி செய்கின்றன இத்தகைய பாடல்கள். ஆணுக்கும் பெண்ணுக்குமான உறவு முளைவிடும் முதல் சந்திப்பிலேயே அழுகியும், நாறியும் போகும்படி செய்துவிடுவதான மனப்பான்மையையே இத்தகைய பாடல்கள் ஏற்படுத்துகின்றன.

இன்றைய பாடல்கள் காதலிப்பதற்கும் காதல் புரிவதற்குமான வேறுபாட்டைத்தகர்த்து அதை வெறும் உடல் இச்சையாகக் குறைத்து



படிப்பகம்

கேவலப்படுத்தி தூரத்திலிருந்து நாசியில் பட்டாலும் தலைவலி ஏற்படுத்தும் மட்டரகமான செண்ட்டுகளைப் போல குமட்டலை ஏற்படுத்துகின்றன.

விரகம்- விரசமாகி

காதல்- பாலுறவாகி

காதலர்கள்- காமுகர்களாக ஆகிவிடுகிறார்கள்.

இவர்களுடைய பாட்டில்-,

**''ரத்தம் கொதி கொதிக்கும்**
**உலை கொதித்திடும்**
**நீர்க் குமிழ்போல**
**சித்தம் துடிதுடிக்கும்**
**புயல் எதிர்த்திடும் ஓர் இலைபோல''**

என்ற பாடல் காதலிப்பது-அடுப்பு, நெருப்பு, கொதிப்பு, தகிப்பு ஆகியவற்றால் ஆன தீவிரமான கரடுமுரடான உஷ்ண வேலை என்பது போல சித்தரிக்கிறது.

* நிலாக்காயுது

* ஒட்டகத்தக் கட்டிக்கோ

* பதினெட்டு வயது இளமொட்டு மனது

* ருக்குமணி ருக்குமணி

* சின்ன ராசாவே சித்தெறும்பு

* உசிலம்பட்டி பெண்குட்டி

* லாலாக்கு டோல்டப்பிமா

போன்ற பாடல்கள் காதலர்களோ, காதலைப் பற்றியோ பேசும்போது பாலுறவு பற்றிய பச்சை வர்ணனைகளாகவே முடிவு பெறுகின்றன.

**''சுண்டு விரல் தொட்டதும் அந்த இடம் துடிக்க**
**காமதேவன் மண்டபத்தில் கச்சேரியும் நடக்க**
**கன்னிமகள் வளையலும் பின்னணிகள் இசைக்க**
**முத்தம் பந்தாடுது உயிர் மொத்தம் தள்ளாடுது''**

இந்த ஜென்மம் ஈடேறாது என்று சொல்லும்படி காதல் கொண்ட

www.padippakam.com

மனங்களும், உணர்வுகளும் கௌரவத்தையும், கண்ணியத்தையும் இழந்தே போகின்றன. காதல் என்பது இதுதான், இவ்வளவுதான் என்ற எண்ணத்தை மட்டுமல்ல,

*''கற்பூரம் எதுக்குக் காமிக்கத்தானே*
*கட்டிலும் எதுக்கு சாதிக்கத்தானே''*

என்று வாழ்நாளின் சாதனையே கட்டிலாகவும், பாலுறவாகவும் சித்தரிக்கப்படுவதில் அபாயம் இருக்கிறது.

சொந்த வாழ்வில் காதலித்தபோது நாகரீகத்தை நடுவில் அமர்த்திய கவிஞர் பிறர் வாழ்வின் காதல் மட்டும் உடலிச்சைத் தணிப்பில் உருக்கொள்வதாகக் காட்டுவது புதிராக இருக்கிறது.

ஒரு கவிஞனின் பெருமை அவன் எவ்வளவு செல்வந்தனாக வாழ்ந்தான், எத்தனை வீடுகள் வாங்கினான், எப்படி வியாபாரம் செய்தான், எத்தனை மாளிகை கட்டினான் என்பதனால் அறியப்படுவதல்ல. இப்படிக் கணக்குப் போடுவதாக இருந்தால் வாடகைக்கும், உப்புக்கும், புளிக்கும் திண்டாடி வறுமையில் உழன்ற பாரதி ''மகாகவி'' என்கிற பட்டத்தை விலக்க வேண்டியிருக்கும்.

ஒரு மருத்துவர் அவர் எத்தனை உயிர்களைக் காத்தார் எத்தனை அறுவை சிகிச்சைகளைச் செய்தார் என்பதனால்தான் புகழ் அடைவாரே அல்லாமல் எத்தனை சதுரஅடிக்கு சொந்தக்காரராக இருந்தார் என்பதனால் அல்ல.

மரம் தன்கனிகளால் அறியப்படும்.

மனிதன் தன் செயல்களால் அறியப்படுவான்.

கவிஞன் தன் படைப்புக்களால் மட்டுமே அறியப்படுவான்.

சினிமாக் கவிஞர்கள் சகல ஆற்றல்கள் உடையவர்களாக இருந்தும் வெள்ளிப் பணத்தின் எல்லைக்குள் முடங்கிப் போவதே வேதனை அளிக்கிறது. கா.மு.ஷெரீப் சொன்னதைப் போன்று, ''கவிஞன் என்பவன் ஒரு தாய் மாதிரி, பத்தியம் இருக்கணும், ரசிகனை அவன் புள்ளை மாதிரி நேசிக்கணும், எதைக் கொடுக்கணும் எதைக் கொடுக்கக்கூடாதுன்னு ஒரு பொறுப்போட எழுதணும்'' என்பதைப் பின்பற்றுவது கடினமாக இருந்தாலும் சகமனிதன் மேல் காட்டப்பட வேண்டிய சாதாரண நேயத்தையாவது பிரதிபலிக்கலாமில்லையா? தங்களுடைய பேராசைகளையும், சுயநலங்களையும் நிறைவேற்றிக் கொள்ள கேட்போர் நெஞ்சங்களில் நஞ்சு கலக்குகிற கொலை பாதகச்



படிப்பகம்

www.padippakam.com

செயலை விட்டு விடலாம் இல்லையா? படித்தவன் பாவம் செய்வதும், பணம் சேர்ப்ப துமே வாழ்வின் வெற்றி என்று அதற்காக எதையும் எழுத முன்வருவதும் நம் காலத்தின் துயரமல்லவா?

இக்காலப் பாடல்களை அக்காலப் பாடல்களுடன் ஒப்பிட்டுத் தாழ்த்தும் முயற்சியல்ல எனது நோக்கம். போய்விட்ட காலம் பொற்காலம் என்று நிறுவுகிற எண்ணமும் எனக்குக் கிடையாது. எல்லாக் காலங்களிலும் தரமான பாடல்களும் தரமற்ற பாடல்களும் இருந்தே வந்திருக்கின்றன. அத்தகையவற்றை ஒரே படைப்பாளி உண்டாக்கியும் இருக்கிறான். ஆனால் இப்போது தரமற்ற பாடல்களின் விகிதாச்சாரம் விரிவடைந்து கொண்டே போகிறது என்பதே வேதனை.

ஆத்ரேயா, வயலார், ஸ்ரீஸ்ரீ, வரவரராவ், கத்தார் ஆகிய ஆந்திர மாநிலத்துப் புரட்சிக்காரர்களைப் போலவும், மகாராஷ்டிரத்துக் கவிஞன் அமர்ஷேக் , வங்காளத்தின் ஷலீல் சௌத்ரி போலவும் கவிஞர்கள் தோன்ற வேண்டும்.

> ''கொட்டடி கொட்டி எழுந்தாள்- அன்னை
> கோபத்திலே மின்னல் தீயை உமிழ்ந்தாள்''

என்றும்

> ''பச்சைப் பசுந்தழை காட்டிலே இலைமேட்டிலே
> தச்சுக் கிடக்குது புன்னகை மழை''

போன்ற சந்தச் சொற்களால் கவிதைபாடும் திறனிருந்தும் திரைப்படத்துறையை எடுத்துக் கொள்ளாத எண்ணற்ற கவிஞர்கள் நாடெங்கும் சிதறிக்கிடக்கிறார்கள். அவர்களை அடையாளம் கண்டு ஊக்குவிப்பது சினிமாவின் கடமையும் தமிழரின் கடமையும் ஆகும்.

சாதித்து சலிப்புக் கொண்டுவிட்டவர்கள் தம்மைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும் அல்லது விலகி வழிவிட்டு திறமையுடைய புதியவர்களை வளர்ப்பதும் வளரவிடுவதுமே இன்றைய கவிஞர்கள் செய்ய வேண்டிய பணி.

சித்திரக் கவிதைக்கும் சீட்டுக் கவிகளுக்கும் இடையே சிக்கிக் கொண்டிருந்த தமிழன் இருளைக் கிழித்துக் கொண்டு சூரியச் சுடராய் கிளம்பிய பாரதியைப்போல புதிய கவிஞர்கள் புறப்பட்டு வந்து வெள்ளித் திரையை தமிழ் வண்ணத்திரையாக மாறுவார்களாக.

(-பாமரன் எழுதி பினாங்கு பயனீட்டாளர் சங்கம் வெளியிட்டிருக்கும் வாலி+வைரமுத்து= ஆபாசம் என்னும் நூலின் முன்னுரை)



படிப்பகம்

www.padippakam.com

# படைப்பும் படைப்பாளியும்
# சில மறுப்புகள்

ஐசக் அருமைராஜன்

இலக்கியம் படைக்கப்படுவதற்கான ஒரு சூழல் இருக்கத்தான் செய்கிறது. அது சூழலா, சூழ்நிலையா என்று வித்யாசப்படுத்திப் பார்க்கத் தேவையில்லை.

தனி மனிதன் மட்டுமல்ல, ஒரு சமூகமே படைப்பாற்றல் கொண்டதுதான். படைப்பின் தர வித்தியாசத்தால் தனி மனிதன் படைப்பாளியாகத் தனித்து நிற்கிறான்.

தர வித்தியாசம் எப்படி ஏற்படுகிறது?. பிறவியில் ஏற்படுகிறதா? அல்லது ஏதோ ஒரு பாதிப்பால் ஏற்படுகிறதா? அல்லது எழுதி எழுதி கிழித்த பயிற்சியால் ஏற்படுகிறதா? அதுவுமில்லை என்றால், மனதுள் மறுபடி மறுபடி அசை போட்டுக் கிடைத்த பயிற்சியால் ஏற்படுகிறதா?

படைப்பு புற உலகிலிருந்து மனதில் பதிவாகிறது. அது எழுத்தில் வெளிப்படும் போது ரசத்தோடு, அழகோடு, உத்திகளோடு, எதார்த்தமாக வெளிப்படுகிறது. வெளிப்பாடு நேர் எதிரான முடிவு பெறுகிறது என்பதில் அர்த்தமில்லை. மனதுள் கிடந்து ஊறி வெளிவரும் போது, எது முடிவோ அதுதான் முடிவாகிறது.

நேர் எதிர் முடிவு என்பதற்கு, ஓவியத்தின் நெற்றியில் மூக்கை இருத்துவது என்பது அபத்தம். அது குறியீடாக வேறொன்றை அல்லது வேறு அர்த்தத்தை உணர்த்துமானால் சரி. நெற்றியில் மூக்கு வேறு என்ன அர்த்தத்தை உணர்த்தப் போகிறது?

இந்த அளவில் யோசிக்கிற போது படைப்பாளி பயித்தியக்காரனா? மன நோயாளியா? நெற்றியில் மூக்கை இருத்துகிறவனா?

அவன் சமூகக் கூட்டமைப்பில் ஒருத்தன் என்பது சரி. மன இயல் அடிப்படையில் சில நேரங்களில் ஒதுங்கிப் போகிறவன். ஆனால் முற்றிலும் அந்நியனாகிறவனல்ல.

ஏற்கெனவே கூறியவாறு சமூகமே படைப்பாற்றல் கொண்டதுதான். அதை இப்படி யோசிக்கலாம்.

படைப்பாற்றல் கொண்ட சமூகத்தில் சிலர் கொத்தனார்களாயிருக்கிறார்கள். சிலர் ஆசாரிகளாயிருக்கிறார்கள். சிலர் பாடுபடுகிறார்கள்; சிலர் நடிக்கிறார்கள்; சிலர் முடி திருத்துகிறார்கள்; இப்படியே பலதையும் எண்ணலாம். சிலர் மொழியின் சூழ்நிலைப் புலமையினாலும், சிலர் மேல்மட்டப் புலமையினாலும் வெவ்வேறு



படிப்பகம்

www.padippakam.com

படைப்புகளைப் படைக்கிறார்கள். படைப்பு வேறுபடுகிறது. அழகியலும் வேறுபடுகிறது.

படைப்பாற்றல் கொண்ட இந்தச் சமூகத்தில் குறிப்பிட்டச் சூழலில், அல்லது சூழ்நிலையில் ஒருத்தன் எல்லாரையும் மிஞ்சி விடுகிறான். போராட்டச் சூழலில் அல்லது சூழ்நிலையில் பாரதி, சமூகப் படைப்பாற்றலுக்குப் பிரதிநிதியாக, மிஞ்சி நிற்கிறான்.

அதே சமூகத்தில் இன்னொருவன் அது போலப் படைக்க எண்ணி தோற்றுப் போய் விமரிசகனாய் மாறுகிறான். 'அது மாதிரி' படைக்க நினைத்தது தான் தோல்விக்குக் காரணம். படைப்பு என்பது இன்னொருவனைப் போல் படைப்பதல்ல. சுயமாய் படைக்க முடியாத போதுதான் போலிப் படைப்பு உருவாகிறது. ஆகப் படைப்பு தோற்றுப் போகிற போது, வெற்றியடைந்த படைப்பாளியைத் தகர்த்துவிட விமரிசன வேடம் தேவைப்படுகிறது. இம்மாதிரி விமரிசகர்கள், எல்லா மொழிகளிலும் உண்டு. இவர்களிடம் கோபத்தொனி கூடுதலிருக்கும்.

இந்த அடிப்படையில்தான் பல விமரிசகர்கள் தோன்றியிருக்கிறார்கள். தங்கள் தவறுகளைச் சரியென்று காட்ட ஒரு குழுவை நிறுவ வேண்டிய கட்டாயம் இவர்களுக்கு ஏற்படுகிறது. அல்லது நிறைய படித்ததாகக் காட்ட வேண்டிய கட்டாயம்





படிப்பகம்

ஏற்படுகிறது. சம்பந்தமில்லாத வெளிநாட்டு எழுத்தாளர்களின் பெயர்களை அடுக்கிக் கொண்டு போகிற இந்த வகை மனநோய், ஒரு கோளாறு.

வேறு சில தோல்வியாளர்கள் மூளை வேலையில் ஒன்றைப் படைத்துவிட்டு இது தலைச்சிறந்தது என்று நிலைநாட்டத் தான் உருவாக்கிய உள்வட்டக் குழுவை நிர்ப்பந்திக்க வேண்டிய நிலையோ, குழுவினருக்குச் சம்பளம் தர வேண்டிய நிலையோ ஏற்படுகிறது. சில நேரங்களில் இந்தச் சம்பளம் வீட்டுக்கு கூட்டிச் சென்று விருந்து ஏற்பாடு செய்வதாக அமைகிறது. அல்லது, சென்னை போன்ற இடங்களுக்கு வருகிற போது தனி அழைப்பின் மூலம் ஒரு குழுவை மட்டும் முதல் தர ஓட்டலில் அழைத்து விருந்து செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. சம்பளம் பல வகைகளில் கொடுக்கப்படுகிறது.

(II)

இந்தச் சூழலில் பாதிப்பு பற்றி அறிய வேண்டியுள்ளது. படைப்புக்கும் பாதிப்புக்கும் உள்ள சம்பந்தம் யாது என்பதை இனி ஆழமாக அறிதல் வேண்டும். இதை அறிய படைப்பாளி யார் என்று நோக்குவோம்.

படைப்பாளி படைப்புக்காய்த் தன்னை தயார்ப்படுத்திக் கொண்டவன்; அல்லது பக்குவப்படுத்திக் கொண்டவன். இந்தத் தயார்படுத்தல் அல்லது பக்குவப்படுத்தல் என்பது படைப்பாளி தன்னை காப்பாற்றிக் கொள்ள (தெரிந்தோ, தெரியாமலோ) எடுத்துக் கொண்ட முதல் நடவடிக்கை. எதிலிருந்து?

அவலங்களிலிருந்து; தோல்விகளிலிருந்து; சமூக அநீதிகளிலிருந்து; மூர்க்கத்தனமான சுய கோபங்களிலிருந்து. இவை பாதிப்புகள்.

இந்தப் பாதிப்புகளை இரண்டாக பகுத்துக் கொள்ளலாம்.

முதலில் படைப்பாளிக்கு ஏற்பட்ட பாதிப்புகள், இரண்டாவது பிறருக்கு ஏற்பட்ட பாதிப்புகள். இவை இவன் கண்டவை; அல்லது கேள்விப்பட்டவை; அந்தப் பிறரோடு இவனும் ஒரு பாத்திரமாகி அறிந்தவை.

இந்தப் பாதிப்புகள் இவனை வன்முறையாளனாக்கக் கூடும்; அல்ல பயித்தியமாக்கக் கூடும்; அல்லது தற்கொலைக்குத் தூண்டக்கூடும். இவற்றிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள இவன் எழுத்தை ஒரு வடிகாலாக்குகிறான்.

எழுத்து, எழுத எழுத இவனுக்கு ஒருவித பரவசத்தைத் தருகிறது. ஆகவே தொடர்கிறான்.

இந்த அனுபவங்கள் இவனுடையவை மட்டுமல்ல. ஒரு சமுதாயத்துக்கே உள்ளவை தாம். பலரும் வடிகாலாக வேறு வழிகளைத் தேடிக் கொண்ட போது,

www.padippakam.com

இவன் எழுத்தை வடிகாலாகத் தேர்வு செய்தான்.

பாதிப்பு, சொந்தமானதாக இருக்கும் போது அழுத்தமாகப் பதிந்து விடுகிறது. 'கீறல்கள்', 'உறவுகள்', 'சாய்வு நாற்காலி', 'ரப்பர்' போன்ற நாவல்களில் இது அழுத்தமாகப் பதிந்துள்ளது.

பிறரின் அனுபவங்களைப் படைப்பாளி சுவீகரித்துக் கொண்டு எழுதும் போது இந்த வகை அழுத்தம் பதிவதில்லை.

இங்கு தான் தலித் இலக்கியம், பாதிக்கப்பட்ட தலித்தால் எழுதப்பட வேண்டும் என்ற கூற்று நியாயமானதாகிறது.

தலித் கூட அதைச் சரியாகச் செய்யவில்லையே என்ற கேள்வி எழுகிறது. பாதிப்பு மட்டுமல்ல, அதற்கான முயற்சி, ஆற்றல், பயிற்சி இன்னும் பலதும் போதாது என்பது தெளிவாகிறது. ஆனால் இந்த ஆற்றல் வந்து விடும்.

படைப்பாளி தினசரி வாழ்க்கையைப் படைப்பதில்லை. தினசரி வாழ்க்கை எல்லோருக்குமுள்ளது. சாப்பிடுவது, குடிப்பது, நடப்பது என்பதுதான் தினசரி வாழ்க்கை. இது போகச் சில சம்பவங்கள் நடந்து விடுகின்றன. அவை பாதிப்பை ஏற்படுத்துகின்றன. பாதிப்பை ஏற்படுத்தாத சம்பவங்கள் படைப்பில் வருவதில்லை.

பாதிப்பை ஏற்படுத்திய சம்பவங்களிலும் எல்லா சம்பவங்களும் படைப்பில் வருவதில்லை; எதை விட வேண்டுமோ அதை விட்டு, தேவையானதை மட்டுமே படைப்பாளி எடுத்துக் கொள்ளுகிறான். தேவையானது யாது? அது படைப்பாளிக்குத் தெரியும். அது அவன் திறமையும் கூட. 'உறவுகளில்', நீல.பத்மனாபன் விட வேண்டியவற்றை விட்டுவிட்டார். எடுக்க வேண்டியதை எடுத்துக் கொண்டார்.

பாதிப்பை ஏற்படுத்துகிற ஒரு சம்பவம் ஒரு படைப்பாளிக்கும் இன்னொரு படைப்பாளிக்கும் வேறுபடலாம்.

''பாவை விளக்கு' கதாநாயகன் நான்கு பேரைக் காதலித்தான் என்பது தான் சம்பவம். இது ஒரு பெரும் பாதிப்பு. அதனால்தான் இது எழுதப்பட்டது. சிலருக்கு அல்லது பலருக்கு இப்படி ஏற்பட்டுவிடுகிறது. அகிலனுக்கு ஏற்பட்டது எழுத்தாகியது. ஆனால் அகிலன் சிறந்த எதார்த்த எழுத்தாளரா என்பது வேறு!

அப்படியானால் கம்பனுக்கு, ஷேக்ஸ்பியருக்கு, வால்மீகிக்கு, வியாசருக்கு ஏற்பட்ட வாழ்க்கைப் பாதிப்பு என்ன? அதை அறிந்து கொள்வது எப்படி? இது ஒரு கேள்வி. நல்ல வாசகன், படைப்பைக் கவனமாக வாசிக்கும் போதே அதை அறிந்து கொள்வான். படைப்பு படைப்பாளியின் கதையை மறைமுகமாகச் சொல்லவே செய்யும். அது ஒரு சுய வாழ்க்கைத் தொகுப்பு அல்ல தான். ஆனாலும் படைப்



படிப்பகம்

www.padippakam.com

பாளியை ஆங்காங்கே அடையா ளம் காட்டும்.

அடுத்த அபத்தம், படைப்புச் செயல் படைப்பாளியின் உள் ளுள்ள ஓர் பண்பிலிருந்து உற்பத்தியாகிறது என்பது. 'ஓர் பண்பு' என்றால் யாது? அல்லது 'பண்பு' என்பது தான் என்ன? 'உள்ளுள்ள' என்றால் என்ன? அது புறம் சாராததா? மேலால், படைப்பு உற்பத்திப் பொருள் அல்ல. வெறும் மூளைப் படைப்பு உற்பத்திப் பொருளாகலாம். 'ஒரு கடலோரக் கிராமத்தின் கதையோ' அல்லது 'ரப்பரோ' வெறும் உற்பத்திப் பொருட்கள் அல்ல. படைப்பாளியின் பண்பு, நாணயம் எல்லாம் வேறு வேறு இலக்கணத்துக்கு உட்பட்டவை. நல்லவன் என்பதன் அர்த்தம் இங்கு வேறு. படைப்பாளி தீவிரவாதியாகவும், இருக்கலாம் - செயல்பாட்டில்; சிறைக் கைதியாகவும் இருக்கலாம் - சட்டத்தில்; ஆக, பண்பு வேறு. இது ஒரு 'ரிலேட்டிவ் டெர்ம்'.

ஏற்கெனவே கூறியவாறு படைப்பு புறச்சார்பில், அகத்தில் பதிந்து மீண்டும் புறத்துக்கு வருகிறது. பாதிப்பு வழங்குகிற அனுபவம் எழுத்தாளனின் சொத்து. அந்த அனுபவமே படைக்கக் கூடிய பயிற்சியையும் வழங்கிவிடுகிறது. ஆனால் பயிற்சி உடனே கிடைத்து விடுவதில்லை. அனுபவங்களைப் படைக்கச் சிலர் முப்பதாண்டுகள் அசை போட்டிருக்கிறார்கள்.

படைப்பிலக்கியத்தில் வருகிற பாத்திரங்கள் எங்கேயோ ஓர் உலகத்தில் வாழ்கிறவர்கள் அல் லர். குறிப்பாக, எதார்த்த படைப்பு களிலுள்ள கதாபாத்திரங்கள் சமூகத்தில் வாழ்கிறவர்கள். அவர்க ளின் நடை, உடை, பாவணை, தனிக்குணங்கள், பொறாமைகள், முரட்டுதனங்கள், மென்மைகள், புற, அக வாழ்வில் அவர்களின் தாக்கங்கள் அனைத்தும் படைப் பாளியால் சரியாகக் கவனிக்கப் பட்டுப் படைப்பில் வருகின்றன. 'கடல்புர'த்தில் வருகிற தரகனும் மரியம்மையும், பள்ளி வாத்தியாரும், படைப்பாளி இந்த சமூகத்தில் கண்டவை.

இந்தப் பாத்திரங்களை படிக்கிற வாசகர்களுக்கு இவர்களைத் தெரியும். வாசகர்கள் மயங்கப் போவதில்லை.

நிஜம் எப்போதும் ஒன்றுதான். அது பலவாக இருக்க முடியாது. எதார்த்த படைப்பில் வாசகன் காண்கிற 'அம்மா' சமூகத்தில் அவன் காண்கிற அம்மாதான். ச்மூகத்தை ஒதுக்கி தள்ளிவிட்டு வீட்டுக்குள் பொய்யான குளிர் அறைக்குள் உட்கார்ந்து கொண்டு கற்பனை செய்கிறவனுக்கு இந்த அம்மாக்களைத் தெரியாது. காரணம் இவனின் வாழ்க்கை போலி; ஆனால் வாசகனுக்கு நிஜம் தெரியும்.

(III)

படைப்புக்கு மரபு உண்டா?



படிப்பகம்

www.padippakam.com

நிச்சயம் உண்டு. ஆனால் படைப்பாளிக்கு என்றுமே மரபு தடையாக இருந்ததில்லை. மரபு வானத்திலிருந்து விழுந்ததுமல்ல.

மனிதனை எழுத்தில் படைக்கிற போது கற்பனையாகவும் இருக்கலாம். எதார்த்தமாகவும் இருக்கலாம், இரண்டும் இரண்டு வகை மரபுகள். முன்னதைப் படைக்கும் எழுத்தாளன் வேறு; பின்னதைப் படைக்கும் எழுத்தாளன் வேறு.

''ஆயிரத்தொரு இரவு'களில் எதார்த்தமில்லையே என்று கேட்கக் கூடாது. நவீனத்துவப் படைப்புகள் எதார்த்த வாதத்தை வீழ்த்திவிட்டு வந்தவை என்பதும் அபத்தம். எதையும் எதுவும் வீழ்த்த முடியாது. அப்படி முடிந்திருக்குமானால் இன்று டால்ஸ்டாயின் படைப்புக்கள் முகவரி தெரியாமல் போயிருக்கும். கார்க்கியின் 'தாய்' பரண்கஎில் தூங்கிக் கொண்டிருக்கும். ஆனால் அப்படியில்லை.

புற உலக நிஜம் இலக்கியத்தில் நிஜமாகப் படைக்கப்பட வேண்டும், அதற்கான திறமை வேறு. அது முடியாதவன் அந்த மாதிரி படைப்புக்கு வரமாட்டான். ராஜா ராணி கதைகளை எழுதப் போய்விடுவான். அதுவும் வரவில்லை என்றால் செங்கல் சூள்ளுக்குப் போய்விடுவான்.

இனி எழுத்தில் நிஜம் என்பது பிரதிபலிப்பல்ல. 'போட்டாத்' தனமானதுமல்ல, சமுகத்தை பிரதிபலிக்கும் எழுத்து, சிருஷ்டி சம்பந்தப்பட்டது.

சிருஷ்டி சம்பந்தப்பட்டது என்பதால்தான், படைப்பில் எங்கேயோ படைப்பாளி தென்படுகிறான். படைப்பாளி படைப்புடன் முடிந்து விடுவதில்லை. மனித சதை, எலும்பு, இரத்தத் தோடு, இதையெல்லாம் படைத்த இறைவன் ஆன்மாவாகத் தொடர்பு கொண்டிருப்பது போலத்தான் இது. (இறைவனை நம்பாவிட்டால் 'இயற்கை' என்க.)

வாசிப்பில் கவனமுள்ள எந்த வாசகனும் படைப்பாளியின் பெயர் இல்லாமலேயே இது இன்னாருடைய படைப்பு என்று திட்டவட்டமாகக் கூறிவிடுகிறான். படைப்பாளிக்கும் வாசகனுக்குமுள்ள தொடர்பு கிட்டத்தட்ட கவிமணிக்கும், டி.கே.சி.க்குமுள்ள தொடர்புதான்.

படைப்பாளிக்கும் படைப்புக்கும் பிளவு உண்டு என்பது கவனக்குறைவான கருத்து. பிளவு இருந்தால் படைப்பு குப்பையாகும்.

அலுவலக வேலை வெறுப்பாயிருக்கலாம். அவனே படைப்பாளியாயிருக்கும் போது வேறு மனிதனாகிவிடுகிறான். பிளவு ஏற்படுகிறது என்பது அனுபவக் குறைவால் ஏற்படுகிற கருத்து. வெறுப்பு இருப்பதால் தான் அவன் படைப்பாளியே ஆகிறான்.



படிப்பகம்

www.padippakam.com

இனி குறிக்கோள் கொண்ட எழுத்து, குறிக்கோளற்ற எழுத்து என்று இரண்டு வகை இருக்கிறது. இது மனம் சம்பந்தப்பட்டது.

சிலருக்கு இயற்கையாகவே மிதமிஞ்சிய செல்வத்தில் நாட்டமிருக்காது. இருப்பது போதும் என்ற தத்துவார்த்த வாழ்க்கை ஒன்று இருக்கிறது. சி.சு.செல்லப்பாவிடம் இது இருக்கிறது.

இதைப் புரிந்து கொள்ளாமல், வண்ண நிலவன் வறுமையில் வாடும் போது ஒரு நாள் புஷ்பா தங்கதுரை மாதிரி அம்மணக் கதைகள் எழுதவோ, சிவப்பு விளக்கு கதை எழுதவோ போகலாம் என்பது நச்சுக் கருத்து. இது படைப்பாளியைப் புரிந்து கொள்ளாமை மட்டுமல்ல அஞ்ஞானமும் கூட. இங்கே வண்ண நிலவனை மட்டுமல்ல, புஷ்பாவையும் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது. புஷ்பாவின் ‘ஒரு ஊதாப்பூ கண்சிமிட்டுகிறது'' போன்ற கதைகள் எந்த வகையைச் சார்ந்தவை என்று காணுதல் வேண்டும். இப்படி அணுக, முதலில் கோட்பாடு வகுத்துக் கொள்ள வேண்டும், வெறுமனே வார்த்தைச் சாட்டைகளை விமரிசனமாக ஏற்க முடியாது.

இனி வாசகனைப் பற்றிக் கொஞ்சம் கூடுதலாகப் பார்க்க வேண்டும். படைப்பாளிக்கும் வாசகனுக்கும் உள்ள தொடர்பு பற்றி அறியாமல், இலக்கியம் வாசகனின் வெளியீடு என்று கூறிவிடக் கூடாது. இது என்ன அர்த்தத்தில் கூறப்பட்டாலும் வாசகன் நுகர்கிறவனாக மட்டுமே நிற்கிறான். நுகரும் தன்மையில் தான் வேறுபாடு. இதனால் தான் ஒரு படைப்புப் பற்றி பத்து வாசகர்கள் பத்து மாதிரி சொல்லுகிறார்கள். அவனுக்குள் ஒருமைப்பாடு இருப்பதில்லை. வாசகனின் கீழ் மட்ட அளவுகோல் ‘புரிதல்' மட்டுமே. புரிதலிலும் வேறுபாடு உண்டு.

வாசகனே விமரிசகன். இது ஒரு ‘மாறல்' தத்துவம், வாசகன் விமரிசகனாக மாறுவது வளர்ச்சியல்ல, வளர்ச்சி பின்னர் தான் நேருகிறது. ‘மாறல்' கால கட்டத்தில் இவன் குழுக்களிலோ, சாதியிலோ, மதத்திலோ, வேறு எதிலோ விழுந்துவிட்டால், வளர்ச்சி தடைபடுகிறது.

‘வளர்ச்சி' பெற்ற விமரிசகர்களில் கூடப் பொதுமை காணல் அரிது. பிறவிக் குணங்களைத் தாண்டி வளர்கிற வளர்ச்சி விமரிசகனுக்குத் தேவைப்படுகிறது.

இனி, வாசகனும் வாழ்க்கைப் பாதிப்புக்கு உட்பட்டவனே. பாதிப்பின் விளைவாய் வெளிவரும் படைப்பை இத்தகைய வாசகன், எந்தக் குழுவை, எந்தச் சாதியை, எந்த மதத்தைச் சார்ந்தவனாயிருந்தாலும் பாராட்டவே செய்வான். இதனால்தான் நல்ல படைப்புகளை, குழு சார்ந்த விமரிசகர்களால் இருட்டடிப்பு செய்ய முடியவில்லை. இருட்டடிப்பு முயற்சிக்கு எதிராக, வாசகன் நிற்கிறான்.



படிப்பகம்

www.padippakam.com

## வலை

(சிறுகதைகள்-பாவண்ணன்-'தாகம்' 11, சிவப்பிரகாசம் தெரு, பாண்டிபஜார், சென்னை-17. விலை ரூ.முப்பது)

வெகுஜனப் பத்திரிகைகளிலும், சிற்றிதழ்களிலும் தன் இயல்பு கெடாமல் எழுதிக்கொண்டிருக்கிற பாவண்ணனின் பனிரெண்டு சிறுகதைகளடங்கிய தொகுப்பு வலை.

அன்றாட வாழ்க்கையில் காணும் சாதாரண மனிதர்களின் சாதாரண பிரச்சினைகள்தான் அவருக்கான கதைத்தளம். பரந்து விரிந்த வெளியில் அழகான செவ்வகக்கட்டத்தைத் தேர்ந்தெடுக்கும் புகைப்படக் கலைஞர் கள்போல் இந்த சாதாரணங்களுக்குள் கதையைக் கண்டுபிடிப்பதுதான் பாவண்ணனின் பலம்.

சாதாரண மனிதர்களைக் கதை மாந்தர்களாக்கும் போது உள்ளார்ந்து அவர்கள் மேல் ஒரு அசாதாரணமானத் தன்மையை சுமத்திவிடும் ஆபத்து பொதுவாக நிகழ்ந்து விடுவதுண்டு. ஆனால் பாவண்ணன் தன் கதை மனிதர்களை அப்படியெதுவும் சுமைதாங்கிகளாக்குவதில்லை.

எல்லாக் கதைகளிலும் வெவ்வேறு விதமான மனிதர்கள் இடம்பெறுவதும் குறிப்பிடத்தக்கது.

எதைக்கதாசிரியர் சொல்ல வேண்டும், எதை பாத்திரங்கள் பேச வேண்டும் என்பதில் இந்தக் கதைகள் தெளிவோடிருக்கின்றன.

ஆனால், படம் முடிந்த பிறகு நாம் வீடுபோய்ச் சேருகிற வரைக்கும் ஓடிக் கொண்டிருக்கிற 'ஏ.வி.எம்' சின்னம் மாதிரி கதை முடிந்த பிறகும் பாவண்ணன் சிலவரிகள் பேசிக்கொண்டிருப்பதாய் பல கதைகளில் உணர முடிகிறது.

**-கிருஷ்ண கோபாலன்**



படிப்பகம்

www.padippakam.com

பா. செயப்பிரகாசம்

# மரணமில்லா வாழ்வு

அவன் ஒருவன்
வந்தவர் பலர்

கர்ப்பவதியாய்
அசைந்தது காற்று.
அத்துவானக் காட்டில்
அழுதது நிலா.
ஈசானமூலை
இருண்டு இருண்டு
மைக்கூடாய் கறுத்தது
மேகம்.
''எங்கிருந்தடா நீ?''
எதிர்வந்தவர் கேட்டனர்.
வாது சூதறியா வெள்ளந்தி,
வந்த ஊர் காட்டினான்.

''பள்ளர்புரமா நீ!
பழி எடுங்கடா அவனை''

தலைமேல் உயர்ந்த மரணத்தை
அடையாளம் கண்டு, அலறினான்.
''அண்ணே, நா நம்ம சாதி''
கேட்பதற்கு இல்லை மனிதசாதி.

இரவு முழுதும் பெய்கிறது மழை.
மீண்டும் பகலிலும்.
வெட்டரிவாளுக்கு மழையா, வெயிலா?
தண்ணீரின் நிறம் சிவப்பு.
மற்றவர்க்கு
வாழ்வில் மரணம்
என் காட்டில்
மரணத்துள் வாழ்வு.



படிப்பகம்

www.padippakam.com

எதுத்த வீட்டு மந்திரத்தம்மா
படிச்சுப் படிச்சு
சொல்லிட்டுப் போனாள்.

''பச்சப் புள்ளக்கிப் பால் குடுக்கிறவ
பளயதைப் புளிச்சதைக்
குடுத்துத் தொலைச்சுடாதே
சளிப் புடுச்சுக்சுன்னா
சனியம் புடுச்ச மாதிரி
இட்லிய கிட்லிய வாங்கிக் குடு ஆத்தா''

பேறு காலத்துக்கு வந்த மகளுக்காக,
''குட்டி ஆட்டை
கோனாருட்ட வித்தாச்சு
இனி பண்டுதம் பாக்க
எதை விக்க''
அலமந்து திரிந்தாள் ஆத்தா.

''பச்சப் புள்ளங்க
பளயதைத் திங்க
நா மட்டும் பாக்க வச்சுத் திங்கவா?''
மனசு கேட்காமல்
இருக்கிற இட்லியை
பகிர்ந்து கொடுப்பாள் அக்கா.

அக்கா ஊருக்குப் போன மறுநாள்
பழய சோத்து பருக்கையைப்
பார்த்து
முகம் சுளித்த கடைசிக் குட்டி கேட்கும்
''அக்காவுக்கு எப்பம்மா
மறுபடி புள்ள பொறக்கும்''?

# பத்தியம்

பாட்டாளி



படிப்பகம்

www.padippakam.com

முதியவர் கதை - 1



# ஒற்றைப் பயிர்

குமார். கே

தந்தியை கையில் வாங்கிய கோட்டைக்கு நெஞ்சு 'பட பட'த்தது. என்னவாகி இருக்குமோ என்ற பயம் நெஞ்சில் சூடு கிளப்பிமுகம் இறுகச் செய்தது. படபடப்பு நீங்காமலே தந்தியைப் பிரித்தார். அதற்குள்ளாக அந்த ஃபேன் காற்றையும் மீறி கோட்டைக்கு வேர்க்கத் தொடங்கியது. "தத்தன் எக்ஸ்பயர்டு- தோடன்" என்ற வரிகள் தீயாய்ச் சுட்டன. கை நழுவிய கண்ணாடிப் பாத்திரம் போல் தந்திச் செய்தி முடிந்தது. ஒரு நீண்ட கால மூச்சு நின்று போனது. எதுவாக இருக்கக் கூடாது எனப்பயந்தாரோ அதுவாகவே இருந்துபோனது.

தலை சுற்றியது கோட்டைக்கு. பாரம் தாங்காமல், அந்தஸ்து பாராமல், அந்த குட்டைப் பெஞ்சியில் உட்கார்ந்தார். அதற்கு மேல் அவரால் துக்கம் காக்க முடியவில்லை. காலில் முழங்கை ஊன்றி தலையை கைகளில் தாங்கிக் கொண்டார். ஓர் பேரிழப்பு கோட்டைக்கு யாரைத் தத்துவமாய், ஆச்சரியமாய் பார்த்து வந்தாரோ அவர் சாமானியருள் ஒருவராக சாதாரணமாக ஆகிப் போனார். "என்ன சார் துக்கமா?"-யாரோ ஒரு இளம் கிளார்க் கேட்டான். ஆளைப் பார்க்காமலே தலையை ஆட்டினார்.

அடுத்த ஐந்து நிமிடத்தில் அவரைச் சுற்றி ஒரு சிறு கூட்டம் கூடி விட்டது. தரையில் சிந்தியிருந்த கண்ணீர்த் துளிகளை கண்டு கொள்ளாமல், நிமிர்ந்தார் கோட்டை! கூட்டம் விலக்கி நடந்தார். அந்தக் கூட்டம் விஷயம் பரவிய வேகத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கியது. ஒரு ஆபிசர் வீட்டுச் செய்தி என்றால் சும்மாவா? இதெல்லாம் ஒரு பெரிய ஆபிஸில் சகஜம் என்பதைப் போல் கோட்டை அவர்களைக் கடந்து சென்றார்.

***

அந்த வில்லிபுத்தூர் டாக்ஸிக்



படிப்பகம்

www.padippakam.com

காரன் நிலைமை புரிந்து, பிடிவாதமாய் ரேட் பேசினான்.

நேற்று மாலை கிடைத்தது தந்தி. சென்னையிலிருந்து மதுரை வந்து மதுரையிலிருந்து ஸ்ரீவில்லி புத்தூர் வர மறுநாள் மதியம் வந்துவிட்டது. கோட்டைக்கும் தத்தனுக்கும் இடைப்பட்ட தூரம் ஒரு நாள். இனி செண்பகத் தோப்பு போக வேண்டும்? தாத்தா எப்பொழுது இறந்தாரோ, தோடன் எப்படி திருவில்லிபுத்தூர் வந்துதந்தி கொடுத்தானோ? தெரியவில்லை. ஏனெனில் காலை ஐந்து மணிக்கும் மாலை ஐந்து மணிக்கும் தான் செண்பகத் தோப்பி லிருந்துவில்லிபுத்தூருக்கு பஸ் வசதி உண்டு!

அது நினைவுக்கு வந்த மாத்திரத்திலேயே கோட்டைக்கு டாக்ஸிக்கார்ரன் வாடகை பெரியதாய்ப் படவில்லை. ஏதும் பேசாது காரின் முன் கதவைத் திறந்தார். கோட்டையின் மனைவி, தன் மகனுடன் பின் சீட்டில் அமர்ந்து கொண்டாள்.

வில்லிபுத்தூரிலிருந்து செண் பகத்தோப்பு பதினோரு கிலோ மீட்டர். வழியில் எந்த ஊரும் இல்லாத தனித்த மலைக் கிராமம், அல்லது மலைக்காடு! தாத்தாவை இது நேரம் வரை வைத்திருக் கிறார்களோ இல்லையோ, அந்தை அப்படி எதிர்பார்க்கவும் கூடாது.

அப்படி நினைப்பு வந்தவு டனே கோட்டைக்கு கண்ணீர் வெளிவந்தது. தத்தன் கோட்டையின் தந்தை வழித் தாத்தன்! தன் வாழ்நாளின் இறுதி வரையும், தனித்தே வாழ்ந்து கழித்த வைராக்கியமான கலாச் சாரக் கிழவன். ஒரு ஆழ்ந்த பள்ளத் தில் ஏறி இறங்கியதில் வண்டி அநியாயமாய்க் குலுங்கியது.

கோட்டைக்கு அந்தப் பழைய கால நினைவுகள் நினைவில் எழுந்தன.

செண்பகத் தோப்பு மிகச் சிறிய மலைக்கிராமம்! மழவராயன் என்ற மலைச் சாதி இன மக்களின் பூமி! கோட்டை ஒருவர் தான் அவர் களில் அதிகம் படித்தவர். ஐந்து வரை செண்பகத் தோப்பிலும், பிறகு வில்லிபுத்தூரிலும், பிறகு சென்னையிலுமாக படித்து, வேலைவாங்கி, கல்யாணமும் செய்து என;... இதோ, இதோ வென, ஓடி விரிந்த காலங்கள் தான் நிறைய, அந்த ஐந்து வரைக்கு மான காலத்தில் மட்டுமே அவருக்கு செண்பகத் தோப்பு வாசம்; பிறகெல்லாம் ஹாஸ்டல் தான்! கோட்டையின் காதலுக்கு அவரின் உறவெல்லாம் எதிர்ப்புத் தெரிவித்தபோது அவனுக்கு ஆதரவுக்கரம் நீட்டிய பரந்த மனிதன் தத்தன் மட்டுமே! அவர் யாரையும் பிரித்துப் பார்த்த தில்லை! எத்தனையோ முறை கோட்டை தன்னுடன் சென் னைக்கு வந்துவிடும்படி தத்தனை



படிப்பகம்

www.padippakam.com

அழைத்தபோதும் புன்னகை யுடன் மறுத்தவர். மலையில் தேன் சேகரிக்க சென்ற கோட் டையின் தகப்பன் பன்றி தாக்கி இறந்து போனார். அப்போதும் கோட்டையின் வேண்டுகோளை பிடிவாதமாய் மறுத்தவர். தனி மையில் ஒரு நீடித்த இனிமை கண்ட மாமனிதர்.

தத்தனுக்கு காட்டுச் செல்வங் களை சேகரித்து பிழைப்பது தான் வாழ்க்கை. அதோடு மருத்துவ மும் தெரியும். ஆனால் அது பிழைப்பிற்கு அல்ல. அவருடைய கொள்கைகள் இந்த நூற்றாண் டிற்கு பொருந்தக்கூடியன அல்ல. இறுதி வரை வைத்தியத்தை வருமானத்திற்காகக் கையாண்ட தில்லை. ஆனால் அதை வைத்துத் தான் அவருக்கு அந்த ஊரில் பெயரும் புகழும்!.

கோட்டையின் வருத்தமே, இறுதிவரை தத்தனுக்கு தான் உதவாமல் போனோமே, பயன்படாமல் போனோமே என்பது தான்.

அதை நினைத்த மாத்திரத்தில் கோட்டையால் துக்கத்தை அடக்க முடியவில்லை. காலங்கள் அவரை வலிய தெரிந்தே ஏமாற்றியது போல் உணர்ந்தார். முகத்தை மூடிக்கொண்டு அவர் அழுதது டாக்ஸி டிரைவருக்கு வித்தியா சமாய்ப் பட்டது. ஒ டிக்கான ஆசாமி அழுவதென்பது அவனுக்கு வேண்டுமெனில் ஆச்சரியமாய் இருக்கலாம். ஆனால் கோட்டைக்கு...?

பரந்த உலகு, விரிந்த வானம். விஞ்ஞானமும், ஞானமும் போட்டி போட்டு உலவும் சமூகம். ஆனால் எங்கும் காணப்படும் பரபரப்பு, சிரிப்பு, பேச்சு, உழைப்பு என எதுவும் மனிதர் களை ஒற்றுமைப்படுத்த வில்லையே? பேராசையும், பிறர் கவனக்குறைவை வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்ளும் போக்கும், வேகம் வேகம் என்று சொல்லி அவசரத்தை கடைப் பிடிக்கும் எங்கும், நம்பிக்கை யில்லை. ஒற்றுமையில்லை. தைரியமில்லை. வயதான ஒருவன் உறவுகள் இன்றி ஆஸ்தியுடன் வாழ்வதென்பது இயலாதே போனது. இப்பரந்த உலகில், ஒரு மனிதன் தான் தனியன் என உணரும் பட்சத்தில் அவனால் அடுத்த நிமிடத்தைக் கூட நிம்மதியாகக் கழிக்க முடியாதென்பதே இங்கு நிலவும் உண்மை.

இத்தகைய உலகில், தான் இறுதிவரை தாத்தாவுக்கு பயனாகவில்லையே, உதவ முடியவில்லையே, உதவவில் லையே...என்பதை நினைக்கை யில், அவருடைய ஒற்றைப் பயிர் வாழ்க்கையை நினைக்கையில்,



படிப்பகம்

www.padippakam.com



எத்தகைய மனிதனும், பொறுப்பு உணர்வானாகில் அழத்தான் செய்வான் என்பது டாக்ஸிக் காரனுக்கு எங்கே தெரியப் போகிறது? அத்தகைய பொறுப்பு உணர்ந்தவனுக்கு தன்னுடைய வேசம் முக்கியமல்ல.

ஆனால் இறுதி வரை தத்தன் தான் கோட்டையின் ஆதரவை மறுத்துவிட்டார் என்பது தான் உண்மை. கோட்டைக்கு அது ஒன்று தான் இன்னும் புரியவில்லை.

டாக்ஸி செண்பகத்தோப்பில் நுழைந்தது.

**தா**த்தாவின் வீட்டு முன்னால் கூட்டம் இருந்தது. கோட்டை கூட்டம் விலக்கி உட்புகுந்தார். அவருடைய மனைவி, எதிர்ப் புறமிருந்த மரத்தடிக்குப்



படிப்பகம்

www.padippakam.com

போனாள். அந்த அப்பாவி ஜனங்கள் அந்த சிவத்த மேனியாளை, ''பாவம் அவங்களுக்கு என்ன தெரியும்'' என்று சொல்லி வெகுளியாய்ப் பார்த்தனர்.

இன்னும் தத்தனை எடுக்கவில்லை. அங்கே, எண்ணங்களற்ற ஒரு வெற்றுக் கூடு கிடத்தப்பட்டிருந்தது. கோட்டை அப்படியே மடங்கி உட்கார்ந்து பெருங்குரலெடுத்து அழுதார். அங்கே மீண்டும் ஒரு முறை அந்த ஜனங்களும் அழுதனர்.

பாடை தயாரானது. கோட்டைக்கு வேட்டைக்குச் செல்லும்போது உடுத்தும் உடை, சம்பிரதாயமாய் உடுத்திவிடப்பட்டது. தாரை, தப்பட்டைகள் முழங்கின! அப்போது தான் எங்கிருந்தோ வந்தான் தோடன். கோட்டையின் பால்ய நண்பன். தன் கையிலிருந்த துணிச் சுருளையை கோட்டையின் கையில் ஒப்படைத்தான். கோட்டை அசிரத்தையாய் அதைப் பெற்றபோது, ''ஒங்க தாத்தனிது, பிரித்துப் பாரு இப்பவே''-என்றான் வேண்டுதலாய். கோட்டை பிரித்தார்.

உள்ளே ஒரு பணக்கற்றையும் சில சில்லறைகளும், கூட ஒரு கடிதமும் இருந்தது. இந்த நேரத்தில் கடிதமா எனப் படித்தார் கோட்டை.

அந்தக் கடிதம், தன் இறுதிச் செலவை அதற்குள்ளேயே முடித்துவிடும் படி கோட்டைக்கு கூறியது.

கடைசியில் கூட, கோட்டைக்கு தத்தன் இடம் விடவில்லை. ஒரு பாரம்பரிய வைராக்கியமான வைரம் பாய்ந்த கலாச்சாரக் கிழவன். அந்தப் பணத்தையும், சில்லறைகளையும், தோடனையும், அந்த வெகுளியான ஜனங்களையும், அந்த எண்ணங்களற்ற கூட்டையும் மாறி மாறி பார்த்த கோட்டைக்கு அப்போது தான் அந்த உண்மை புலப்பட்டது. அந்த ஒற்றைப் பயிர் வாழ்க்கை விளங்கியது.

தாத்தாவை முழுதாய் புரிந்து கொண்ட அந்த டீக்கான பேரன் தோடனை கட்டிக் கொண்டு மீண்டும் அழலானார். அவரால் எதுவும் பேச முடியவில்லை. யாரையும் குறிப்பிட்டு கூற முடியவில்லை. அவரிடம் இருந்த மனக் கவலையும் ஏக்கமும், உறுத்தலும் , ஆச்சரியமும் மறைந்தே போய் அடக்க வொண்ணாத ஆற்றாமை அவர்கள்மேல் எழுந்தது. அவர், முடிக்க மாட்டாமல் இடைவிடாது 'ஓ' வென அழுதார்.



படிப்பகம்

www.padippakam.com

காட்டின் விதவிதமான ஓசைகள் அங்கு நிலவிய ஆழ்ந்த அமைதிக்கு அழகு செய்தன. தத்தன் இறந்து போய் மூன்று நாள் ஆகிவிட்டது. கோட்டை தோடனுடன் மலையிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்தார். அந்த மலைபடிவாரத்தில் பத்து பதினைந்து வீடுகள் அவற்றில் சில சிதலமாயிருந்தன. அவைகளில் ஆள் இல்லை. அனைத்தும் அரசு கட்டிக் கொடுத்தது. இது போக மலையில் சிற்சில வீடுகள் உண்டு. ஒரு சிறு குழுமம் தான். அவர்களுக்கென அவர்களைப் போன்று, காய்ந்தபடியும், நனைந்த படியும் அந்த ஊர் சடைச்சி அம்மன், வெற்று வெளியில் நின்றிருந்தாள். அது அவர்களின் கோயில். தட்டைச் செடிகளை பண்டலாய்க் கட்டி சைக்கிளில் ஏற்றிச் சென்று கொண்டிருந்தனர். சிலர் மாட்டுக்கு ஆகும் சந்தையில் விற்கச் செல்கின்றனர்.

தத்தனின் நினைவைச் சுமந்தபடி மலையைவிட்டுக் கிளம்பினார் கோட்டை. வீடு வந்து சேரும் வரை எதுவும் பேசவில்லை அவர்.

'ஆஃப்ட்ரால் ஒரு ஒல்டுமென்னுக்கு இவ்வளவு வருத்தமா?'' - வீட்டினுள் நுழைந்தவுனை் அவர் மனைவி கேட்டாள். அதைக் கேட்டவுடன் கோபமாய் தலையுயர்த்தினார் கோட்டை. இங்கு யார் இவளை விட மட்டம் என நினைத்திருக்கிறாள் இவள்? என்ற எண்ணம் ஆவேசமாய் எழ... ''சீ...முட்டாளே வாயை மூடு...மனித வருத்தங்களுக்கு அளவு கிடையாது. நீயெல்லாம் இவர்களைப் பற்றி சிந்திப்பதற்குக் கூட தகுதியவற்றவள். உன் இரத்தமற்ற வெளுத்த மூளையை எங்கேனும் குப்பையில் போடு முண்டமே...'' -என்றார் கோட்டை. அவர் மனைவிக்கு அவர் நிலை ஏதும் புரியவில்லை. அதிர்ச்சியுடன் அவரையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

## திருத்தம்:

சென்ற இதழில் வெளியான செம்மலரின் இலக்கிய சேவை பற்றிய கட்டுரையின் இறுதிப் பத்தியை கீழ்க்காணுமாறு திருத்தி வாசிக்கவும்.

''காமராஜர் மாவட்டத்தில் தனித்துவமான வறுமையை ஸ்ரீதேவியின் செழுமை கொண்டு மூட நினைக்கும் செம்மலரின் இலக்கிய சேவையில் நம்மைக் கதிகலங்க வைப்பது இன்னும் பல மாவட்டங்கள் பாக்கியிருக்கின்றனவே என்பது தான்.



படிப்பகம்

www.padippakam.com

# நான் தான் மக்கள் ...

நான் தான் மக்கள்
-கூட்டம்-கும்பல்-மந்தை
உலகின் மாபெரும் படைப்புகள் அனைத்தும்
என் மூலமே செய்யப்பட்டன என்று உனக்குத் தெரியுமா?
நான்தான் உழைப்பாளி, கண்டுபிடிப்பவன்,
உலகின் உணவையும், துணிமணிகளையும்
உண்டாக்குபவன் நான்தான்.
வரலாற்றின் சாட்சியாக
பார்த்துக் கொண்டிருப்பது நான்தான்.
நெப்போலியனும், லிங்கனும்
என்னிடமிருந்தே வந்தனர்.
அவர்கள் சாகின்றனர்.
நான்மேலும் நெப்போலியன்களையும், லிங்கன்களையும்
அனுப்புகின்றேன்.
நான்தான் நாற்றங்கால்
நிறைய உழுவதற்காகக் காத்திருக்கும்



www.padippakam.com

சமவெளி நான்தான்.
பயங்கரமான புயல்கள் என்னைக்கடந்து போகின்றன.
நான் மறந்து விடுகிறேன்.
என்னுடைய மிகச்சிறந்தவை
உறிஞ்சப்பட்டு வீணடிக்கப்படுகின்றன.
மரணத்தைத் தவிர
எல்லாமும் வருகின்றன.
என்னை உழைக்கச் செய்கின்றன
என்னிடம் உள்ளவற்றைக் கொடுக்கச் செய்கின்றன.
நான் மறந்து போகிறேன்.
சில நேரங்களில் நான் உறுமுகிறேன்.
என்னை உதறிக் கொண்டு
வரலாறு நினைவி வைத்துக்கொள்வதற்காக
ஒரு சில ரத்தத் துளிகளைச் சிந்துகிறேன்.
பிறகு மறந்து விடுகிறேன்.
மக்களாகிய நான்
நினைவு வைத்துக் கொள்ள கற்றுக்கொள்ளும்போது
மக்களாகிய நான்
நேற்றைய பாடங்களைப் பயன்படுத்துகிறேன்.
சென்ற ஆண்டு
என்னை யார் கொள்ளை அடித்தது என்பதை
யார் என்னை முட்டாளாக்கியது
என்று நினைவு வைத்துக்கொள்கிறேன்.
பிறகு
குரலில் ஒரு கிண்டலின் வெளிச்சத்துடனும்
தொலைதூர கேலிப் புன்னகையுடனும்
''மக்கள்'' என்ற பெயரைச் சொல்ல
உலகிலேயே யாரும் இருக்கமாட்டார்கள்
கூட்டம் கும்பல்-மந்தை
அதன்பிறகு
வரும்

*ஆங்கில மூலம்:* கார்ல் சான்ட்பர்க்
*தமிழில்:* இந்திரன்

www.padippakam.com

# லைப்பாய் சோப்பு

எஸ்.கணேசராஜ்

மத்தியான கஞ்சிகுடிக்க வீட்டுக்குள்ள வாரயில, கருவாட்டு குழம்பு மணத்தது. அரையும் குறையுமாய் கைமுகம் கழுவி சாப்பாட்டுக்கு உக்காந்தான் வெள்ளை. சூடு பறக்க நெல்லுச் சோறு சூட கருவாட்டுக் குழம்பு ஈயத்தட்டுக்கு நாலுதட்டு தின்னுற வேண்டியதுதான். கூடு ஆறும் முன்னால் சோத்தைப் பிசைந்து கைசூடுபட சோத்தோடு 'உஷ் உஷ்'ன்னு சூடு போக ஊதிக்கொண்டிருக்கையில் ஓடிவந்து நெலைப்படி தட்டி சோத்துக்கு குறுக்க விழுந்த மாடன் மூச்சுவாங்க சொன்னான்.

"லேய்...ஊரைச்சுத்தி போலிஸ் வளைச்சுருச்சு அம்புட்டு ஆளுகளும் தெக்காட்டுப்பக்கமா ஓடி ஒளியுதானுங்க ஓடியா..."

"என்னல பேசிக்கிட்டு நிக்கீக போலிஸ் ரோட்டை விட்டு ஊருக்குள்ள எறங்கிட்டானுங்க ஓடியாங்கல" தெருவில் ஒரு கூட்டம் புழுதி பறக்க வெள்ளை வீட்டை தாண்டி ஓடி மறைந்தது.

"குறுக்குச்சாலை முக்குல பஸ்சை மறிச்சு நம்ப ஊறு பயலுவ சகட்டு மேனிக்கு ஆளுகளை வெட்டி சாச்சுட்டானுங்கல...அம்புட்டுக்கிட்டா போலிஸ்ல நம்பளை துவைச்சு துப்பிடுவானுங்க ஓடியா" செவந்தி கைப்பிள்ளையோடு மிரள மிரள நின்றிருக்க, வெள்ளை எழுந்து மாடனோடு ஓடி வந்திருந்தான்.

புலியூத்து முக்கு சுத்தி வந்திருந்தவர்களும், அவர்களோடு பனங்காட்டுக்குள் வந்து சேர்ந்தார்கள். எல்லோரும் காத்தானைத் தூக்கி தலைக்கு மேல் வைத்துக் கொண்டு "ஹோ"வென்று பெருங்கூச்சலோடு ஓடினார்கள்.

"வடக்க தலைவரைப் பாக்க சம்முராசும், சொடலையும் போயிருக்காக....எல்லாம் கூடிப்பேசி போலீஸோட ஒரு சமரசத்துக்கு வந்ததும்தான் நாம ஊருக்குள்ள போக முடியும்."

"நாலைஞ்சு லாரி போலிஸ் வந்து எறங்கியிருக்கு.. ஊருக்குள்ள பொம்பளையாட் களை தவிர யாருமில்லை..."

"காட்டுக்குள்ள இறங்கி தேட ஆரம்பிச்சிட்டாங்கன்னா..."

"தேடிப்புடிச்சு மெடல்



படிப்பகம்

குத்திக்கிற காலமெல்லாம் போலீஸ்ல மலையேறிப்போச்சு. எவனாவது அப்பிராணி அம்புட்டுக்கிட்டானா அடிச்சு தொவைச்சு கேஸ் எழுதற வேலை யத்தான போலீஸ் செய்றானுங்க..

'மேக்க சங்கரன் கோயிலு பக்கமெல்லாம் நாம ஆட்களை வெட்டிக் கொல்லுதானுங்களாமே...''

''வெட்டுவானுங்க வெட்டுவானுங்க..கொஞ்சம் பொறுத்துப் பாரும். அவனுங்க ஆட்களே இல்லாம பன்னிருதேன்...'' இடுப்பிலிருந்து முழங்கால் வரை தொங்கும் வீச்சருவாளை எடுத்து இடது கை பெருவிரலால் தடவி கூர் பார்த்துக் கொண்டே சொன்னான் காத்தான்.

''செய்யணும், அப்படி செஞ்சாத்தான், அந்தப் பயவுள்ளைகளுக்கு புத்தி வரும்'' பெருசு காத்தானின் கைப்பிடித்த வாக்க சொன்னதைத் தொடர்ந்து ,எல்லோரும் 'ஓ'வென்று ஆங்காரமாய் கூச்சலிட்டனர்.

வெள்ளை மட்டும் எதிலும் பட்டுக்கொள்ளாமல் ஒதுங்கியே இருந்தான். அவன் மனதுக்குள் இனம் புரியாத கலக்கம் குடிகொண்டிருந்தது. அவன் சம்பந்தப்படாமலேயே அவனது வாழ்க்கை குடிக்கொண்டிருந்தது. அவன் உண்டு, அவன் பிழைப்பு உண்டென்று இருந்த மனுசனால் நிம்மதியாய் வாழமுடியவில்லை. யாரு யாரை வெட்டினா, வெட்டுனவனுக்கும் வெட்டுப்பட்டவனுக்கும் என்ன பகை என்பது தெரியாமல் கூட்டத்தோடு கூட்டமாய் பாதி சாப்பாட்டிலிருந்து எழுந்து கரம்பைக்காடு முள்ளுக்காடென்று, காலு பொசுங்க ஓடிவந்து ஒளிந்திருக்கிறான். காரணம் கேக்கவும் பயம். காரணம் கேட்டு தப்புன்னு புத்திக்கு புரிஞ்சதை அந்த வெட்டருவா கூட்டத்துடன் விளக்கி ஜெயிப்பது என்பது முடியாத காரியம். கொலைபாவத்துக்கு கொஞ்சமும் அஞ்சாத கூட்டமா இருக்கானுங்க. அவுக ஆட்கன்னு தெரிஞ்சா பால்க்குடி மறக்காத பச்சை மகவைக்கூட நெருப்புல போட்டு பொசுக்கிப் புடுதானுக. அப்படி என்னதான் அந்த ஆட்க இவுங்க மேல விரோதம் கொண்டாடுறாங்க...

''உனக்கு தெரியாதுல்ல இம்புட்டு நாளும் ஐயா சாமின்னு அடிபட்டு அழிஞ்சது போதும்' மாடன் சொல்லும்போது அவன் கண்கள் சிவந்து உடம்பு வியர்த்துப் போவும்.

ஒரு தடவை வெள்ளை பசுவந்தனை எண்ணெய்மில்லுக்கு எள்ளு கொண்டுக்கிட்டு போகையில குறுக்குதெரு முக்குல நின்னு டீ குடிச்சுக்கிட்டு நின்ன நாலு ஆட்க..

''ஏலேய் இங்குட்டு வா''ன்னு



படிப்பகம்

www.padippakam.com

உரக்க சத்தங்கொடுத்து கூப்புட்டானுங்க. சத்தம் வந்த ஆட்களை பாத்தமாத்திரத்தில் உடம்பு குப்புன்னு தீயாய் எரிஞ்சு வேர்த்துச்சு...

''அவனுக யாரை சோலிய முடிக்கிறதுன்னு பாத்துக்கிட்டு இருக்கானுங்க..நம்ம ஆட்க தெக்க வடக்க போகையில வாரயில உஷாரா போயி வந்து சேரனும் தெரியதா''- பேச்சியம்மன் கோயில் திண்ணையில ரகசியமா கூடின கூட்டத்துல மூக்கையனும், காத்தானும் எச்சரித்தது நெனைப்புக்கு வந்தது.

'கிட்டத்துல போயி என்னன்னு கேக்கலாமா...இல்ல அப்படியே பையைப் போட்டுட்டு குறுக்குப் பாதையில விழுந்து ஊறப்பாத்து ஓடிரலாமா' ரெண்டாவது நெனைச்சதுதான் நல்லதாப்பட்டது. மறிக்க யாராவது வாராகளான்னு சுத்தும்முத்தும் பாத்தான். குறுக்குப்பாதை கண்ணுக்கு தெரிஞ்சதூரம் வரைக்கும் ஆளில்லாம வெறிச்சுன்னு கெடந்துச்சு...

'என்னல கூப்புடுதேன் அங்கயே நின்னு முழிச்சுக்கிட்டு நிக்கே வாலன்னா'' கெண்டைக் கால் வரை அவிந்து கிடந்த சாரத்தை மடித்து தொடைதெரிய கட்டிக்கொண்டு இடுப்பு வாருக்குள் எதையோ தேடியதை தூக்கத்திதான் தேடுதாரு.. இன்னும் பராக்கு பாத்துக்கிட்டு நின்னோம் அம்புட்டுதான்.

'யய்யா நான் இல்லை என்னை கொன்னு போடாதீக . சாமி'' தலையில் மூட்டையாய் இருந்த ஆறு பக்கா எள்ளும் கொட்டி மண்ணாப் போக குறுக்குப்பாதையில் விழுந்துஓடி ஊர் வந்து தான் திரும்பிப் பாத்தான்.

''என்னத்துக்கு இந்த உலகம் என்னை ஒருத்தனையே குறி வைச்சு ஓடவிடுது. நான் உண்டு என் பொழப்புண்டுன்னு செவனின்னு உக்கார நெனைக்கிற மனுஷனை இம்புட்டு சிரமப்படுத்தி பாக்குறதுல அந்தக் கடவுளுக்கு தான் என்ன ஆசை. வெள்ளை நெறைய தடவை நடுராத்திரியில மல்லாந்து படுத்து குமுறி குமுறி அழுதிருக்கான்.

'கடவுள்தான் இப்படி சோதிக்காருன்னா பெத்த அப்பன் கூடப் பொறந்த அண்ணன், கெட்டுன பொஞ்சாதின்னு எல்லாரும் என்னைய எம்புட்டு பாடாபடுத்தி எடுக்காக'

பொழுது மெல்ல இருட்டத் தொடங்கியது. கூடி வந்திருந்த ஆட்களும் முன்னெச்சரிக்கையாய் அரிசி, பருப்பு ஆக்கி திங்க பாத்திரம் பண்டம்னு எல்லாம் கொண்டாந்திருக்காங்க. கல்லைக் கூட்டி அடுப்பா ஆக்கி காஞ்ச ஓலைகளையும், சுள்ளிகளையும் பொறுக்கி வந்து நெருப்பு மூட்டி



படிப்பகம்

www.padippakam.com




கூட்டாஞ்சோறு பொங்க ஆரம்பித்தார்கள். யாருக்கும் எந்த கவலையும் இருப்பதாக தெரிய வில்லை. எல்லோரும் வெகுநா ளாய் எதிர் பார்த்து காத்திருந்த தலைமறைவாய் இயல்பாய் இருந்தது. வெள்ளைக்கு அதிர்ச்சியாய் இருந்தது. அவன் மட்டும் அவர்களில் இருந்து துண்டு தரித்து விடப்பட்ட தனி ஆளாய் நடப்பவைகள் எல்லாம் ஆச்சரியமாய் அதிர்ச்சியாய் பேந்த பேந்த பார்த்துக் கொண்டு உக்காந்திருந்தது குற்ற உணர் வாய் மனதைக் குடைந்தது.

அவன் என்றுமே ஊரோடு ஒத்துப் போனதில்லை. அவனை ஊரில் ஒரு மனிதனாய் நினைத்து அதுவரையில் எந்த விசயத்துக் கும் முடிவெடுக்க கலந்துக்கிட்ட தும் கிடையாது. எடுக்கின்ற



படிப்பகம்

www.padippakam.com

முடிவுக்கு ஒத்துப் போகவேண்டிய கட்டாயம். வீட்டுக்குள் சுவர் பார்த்துக் குமுறிக் கெட்ட கெட்ட வார்த்தையால் திட்டி கோபம் தணிந்து போவான். பொஞ்சாதியும், அவன் புள்ளையும் அவனை அப்படியே பார்த்து நிக்க வெக்கம் பிடிங்கித் தின்னும். விருட்டென்று வீடுவிட்டு வெளியேறி விடுவான். இருட்டும் வரை காடாமேடா சுத்தி அலைஞ்சுட்டு நடு ராத்திரியில பூனை போல வீட்டுக்குள்ள மொளைஞ்சு படுத்துக்கிடுவான். அவன் அண்ணனுக்கு அவன் வாழ்க்கை அவன் இஷ்டப்படி அமைஞ்சது. கருப்பசாமின்னு அப்பாவைச்ச பேரை டவுனுக்கு படிக்கப் போனதும் கே.சாமின்னு மாத்திக்கிட்டான். ஊருல சாமின்னு கூப்புட்டாதான் திரும்பிப் பாப்பான். கருப்பான்னு கூப்புட்டா காது கேளாத மாதிரி இருந்துக்கிடுவான். ஊரும் அவனை சாமின்னே பிராமணப் புள்ளைய கூட்டுறாப் போல கூப்புட்டுச்சி.

என்னைய அட்டக்கரியா பெத்துட்டு வெள்ளைன்னு பேரு வைச்சுட்டாரு எங்கப்பா. ஊருக்குள்ள அம்புட்டுப் பயக ளும் கேலி பண்ணுதானுங்க தாங்க முடியல. வெள்ளைங்குற பேரை எங்கிட்டு சுருக்கி கூப்புடச் சொல் றது. கடவுளேன்னு எல்லாக் கேலிக்கும் பொறுத்துப் போக வேண்டிய கொடுமை காதடைச் சப் போயி பொணமா பேசுறவன் பேசிட்டுப் போறான்னு நடக்க ஆரம்பிச்சுட்டேன்.

அண்ணனுக்கு கெட்டனும்னு கிழக்க முக்காணில இருந்து அக்காமவ செவந்திய கூட்டியாந்து வீட்டுல வெச்சு வளத்தாரு. என்னைய விட நாலு வயசு மூப்பு. மதினி மதினின்னு எப்பவும் சீலைய புடிச்சுக்கிட்டே திரியுவேன்.

குளிப்பாட்டுறது, தலை சீவறது பள்ளிக்கூடம் கூட்டிட்டுப் போயி விடுறதுன்னு அஞ்சாப்பு வரைக்கும் அம்புட்டு சோலியும் மதினி தான் செய்வா. அண்ணன் ஒவ்வொரு வருசம் முழுப் பரீட்சை லீவுக்கு ஊருக்கு வாரயில மதினி பூவா சிரிச்சமொகமா இருப்பா. அண்ணன் போரவரைக்கும் அவ மேல லைப்பாய் சோப்பு மணக்கும். ரெண்டு பேரும் ஜாடை மாடையா சிரிக்கிற சிரிப்பு என்ன, பேசுற பேச்சு என்ன, அம்புட்டும் அண் ணன் லீவு முடிஞ்சி ஊருக்குப் போனதும் தண்ணீ வத்திப் போன கம்மாயா மதினி முகம் செத்து செதறிப் போயிடும். பெறவு அண்ணன் வார நா வரைக்கும் யாரு கிட்டேயும் மொகம் குடுத்து பேச மாட்டா. ஆக்குறதும், திங்கறதும், குளிக்கிறதும், படுக்கி றதும்னு சாவி குடுத்த மிஷினா கொஞ்சங்கூட புடிப்பில்லாம இருப்பாசோப்பெல்லாம் போட்டுக்கமாட்டா.



படிப்பகம்

www.padippakam.com

எங்கண்ணன் பொறந்து ஒம்பது வருசஞ்கழிச்சுதான் நான் பொறந்தேன். நான் பொறந்த வீட்டுக்குள்ளதா எங்காத்தா ஜன்னி கண்டு செத்துட்டாளாம். ஊருல சொல்லுவாக. அப்பாவும் ஜாடை மாடையா என்னைய ஏசயில ''பொறக்கயிலேயே ஒரு உசுரை முழுங்கிட்டு பொறந்த பயலேன்னு'' ஏசுவாரு, அடிப் பாரு மதினிதான் மச்சி வீட்டுக் குள்ள கூட்டிட்டுப் போயி வைச்சு அடிபட்ட தழும்பை யெல்லாம் தடவிக்குடுப்பா அடக்கமாட்டாம அழுகை வரும். அப்படியே நெஞ்சோட அணைச்சுப்பா. ஏங்கி ஏங்கி அழுது அப்படியே மதினி மடியில தூங்கிப் போயிடுவேன்.

அப்பதான் தளவாரத்து பள்ளிக் கூடத்துல எட்டாப்பு படிச்சுக் கிட்டு இருந்தேன். மத்தியானம் மூணு மணி வெயிலுல அப்பா மேக்க இருந்து முசுமுசுன்னு வந்தாரு. வடக்கத்தெரு கெங்கு சாமிதான் கூப்புட்டு காட்டுனான். சன்னல் வழியா பாத்தா... அப்பாதான். அம்புட்டு வேகமா நடந்து நா இதுவரைக்கும் பாத்த தில்லை. சன்னலை விட்டு வாச லைப் பாக்கயில வாசலு வழியா வகுப்புக்குள்ள வந்துட்டாரு. வாத்தியாருகிட்ட கேக்காம கொள்ளாம நேரா எங்கிட்ட வந்தாரு. என் மடியில வெச்சிருந்த புஸ்தகத்தையெல்லாம் கொத்தா புடுங்கி கிழிச்சு சன்னல் வழியா எறிஞ்சாரு..

''என்ன என்ன பண்ணுதீரு'' - பதறிய வாத்தியாருக்கு பதில் சொல்லாம என் பொடதியப் புடிச்சுக்கிட்டு ஊருக்கு தள்ளிக் கிட்டு வந்தாரு. ஊருல எல்லாரும் ஒரு மாதிரியா பாத்தாக. எந்த தப்புஞ் செய்யலை என்னைய போட்டு ஏன் இந்தப் பாடுபடுத்து றாரு. பிடியை உதறிவிட்டு அப்பாவை நறுக்குன்னு நாலுவார்த்தை கேக்க மனசு துடிச்சுச்சு. தைரியம் வரலை விளாரு விளாறா அடிச்சு தழும் பேறி போன கோடுகள் கால் சட் டைக்கு வெளிய தெரிஞ்சு பயங் காட்டுச்சு. என்னதா நடக்குதுன்னு பாப்பமே. செவனன்னு அவரு இழுத்த இழுப்புக்கெல்லாம் போனேன்.

அங்க இங்கன்னு வீடுமுழுக்க சொந்தக்கார ஆட்களும் ஊர் ஜனமும் அடைஞ்சு கெடந்துச்சு. மதினி பட்டுச்சீலைகெட்டி தலை நெறைய பூ வெச்சிருந்தா மொ கத்த பாக்க முடியலை குனிஞ்சே நின்னுக்கிட்டு இருந்தா...

''கெட்டுல தாலிய'' அப்பா சொன்னது காதுல விழுந்ததும் தலை கிறுகிறுன்னு சுத்த ஆரம்பிச்சிடுச்சு...

'' என்ன சொல்லுதாரு. யாரு கழுத்துல தாலி கெட்டச் சொல்லுதாரு''

''படிக்க வெச்ச மப்புதான்



படிப்பகம்

www.padippakam.com

அவன் மனசுப்படி நடக்க வெச்சது. இனிமே இந்தப் பயபுள்ளைக்கு படிப்பு கெடையாது. வீட்டோட கெடந்து நாலு மாட்டை மேச்சாத்தான் பெத்தவுங்க அருமை தெரியும்.''

''தாலியக் கெட்டட்டும் கால் சட்டையோட நின்னு கெட்டுனா நல்லாவா இருக்கும்'' மேல வீட்டுக்கார தாத்தா என்னைய அறை வீட்டுக்குள்ள கூட்டிட்டுப் போயி வேட்டிய கெட்டிவிட்டு கூட்டியாந்தாரு. மதினி வெளக்கு மின்ன குனிஞ்சபடி உக்காந்திருந்தா. அப்பா குடுத்த மஞ்ச கயித்தை மதினிமுகம் பாக்காம அவ கழுத்துல கெட்டுனேன். மதினி குலுங்கி குலுங்கி அழுதா.

''மனையில உக்காந்து அழகூடாது... ஆக்கங் கெட்டதனமா போயிடும் கண்ணை தொடச்சுக்கோ'' யாரோ சொன்னாக, மதினி அழுகைய நிறுத்தலை. ஆக்கங்கெட்டதனமாத்தான் போயிடுச்சு... எங்கண்ணன் படிச்சு போலீஸ் வேலையில சேந்து ஒரு பிராமணத்திய கெட்டிக்கிட்டதுக்கு பலி என் படிப்பை நிறுத்தி எட்டாப்பு படிக்கிற வயசுலேயே எனக்கு கல்யாணம் கெட்டி வெச்சு... எங்கப்பன் முன்னால நின்னு ஒரு வார்த்தை பேசலை. பேச புடிக்கலை செத்து பொணமா கெடத்தி வெச்சிருக்கையில் கூட கண்ணீர் வடிக்காம கல்லு கணக்கா நின்னுக்கிட்டு இருந்தேன். அத்துக்கிட்டுப் போன அண்ணன் அத்துக்கிட்டுப் போனதுதான் பெறவு அப்பன் தம்பின்னு ஒட்டவே இல்லை. அப்பன் சாவு தீயாத்து விசேசம்னு எல்லாம் நான் ஒத்த ஆளா நின்னுதான் பாத்தேன்.

படிப்பை விட்ட கொஞ்ச நாளைக்கு அப்பன்கூட ராட்டணம் சுத்த போனேன். குடை ராட்டணம். இருக்கிற குதிரைக எல்லாத்துலேயும் கே.சாமி செவந்தின்னு மதினி எழுதி வெச்சிருந்தது ராட்டணம் தள்ளயில கண்ணுக்குள்ள முள்ளா தைச்சுச்சு. தாலி கட்டி மூனுமாசமாச்சு. மதினி கிட்டத்துல வரவே இல்லை. எனக்கும் கிட்ட நெருங்கி பேச பயமா இருந்துச்சு. பேசனும் சிரிக்கனும்னு ஆசை ஆசையா இருந்துச்சு. பேச்சலை. சிரிக்கலை. வீடே மயானமா இருந்துச்சு... ட்ரவுசிருக்குமேல சாரத்தை கெட்டிக்கிட்டு புறவாசல் திண்டுல உக்காந்து பீடி பத்த வைச்சேன். மொதல்ல இருமி பெறகு பழகிப் போன பழக்கத்துல சுருள் சுருளா மூக்குல வாயுல பொகை விட்டேன். என் ஈடு பயக எவனும் என் கூட பேசலை. ஊர் பெருசுகயெல்லாம் குடும்பஸ்தன்னு என்கூட உக்காந்து பேச ஆரம்பிச்சுட்டாக. அப்பன் செத்த நேர் பதினாராம் நாத்து அண்ணன்



படிப்பகம்

www.padippakam.com

மதினி ரெண்டு பேரும் எழுதுன எல்லா குதிரையையும் உடைச்சு அடுப்புவெறகா போட்டுட்டேன். கம்பி காடாத்துணியெல்லாம் தனித்தனியா பிரிச்சு வித்துட்டு ஊருக்குள்ள கூப்புட்ட வேலைக்கு கொத்துக்கு போக ஆரம்பிச்சேன்.

மதினிங்கிற பாசம் போயி கொஞ்சம் கொஞ்சமா பொஞ்சாதிங்கிற ஆசை வந்துச்சு. மதினி மட்டும் எதிலேயும் பட்டுக்காம அப்படிய மேம்போக்கா இருந்தா. சோறு கறி படுக்கைன்னு ஒரே வீட்டுக்குள்ள இருந்தாலும் இரண்டு பேரும் ரொம்ப தூரம் தூரமா பிரிஞ்சுதான் இருந்தோம். ஜாடை மாடையா வா போன்னு பேசிப்பாத்தேன். நெரசலு பக்கம் நின்னு அவ குளிக்கிறதை எட்டிப் பார்த்தேன். எட்டிப் பாக்குறது தெரிஞ்சும் பதட்டப்படாம அப்படியே குளிச்சா...ஈர உடம்புல புடவைய்யை சுத்திக்கிட்டு அறை வீட்டுக்குள்ள ஓடிவந்தவளுக்கு பின்னாலேயே ஓடிவந்து நின்னேன். சத்தங்கேட்டு திரும்பி என்னைய பாத்தா, கையைப் புடிச்சேன். கைப்பிடிக்குள்ள இருந்த சேலை நழுவி தரையில் விழுந்தது, உடம்பு ஈரம்பட்டு சானித்தரையில் பொட்டு பொட்டாய் பள்ளம் பறிச்சது. நெஞ்சோட இறுக்கி கெட்டிக்கிட்டேன். மனசு பூராவும் வெறி. அஞ்சு நிமிசத்துக்கு நான் நானாவே இல்லை. எல்லாம் முடிஞ்சு நெனைச்சுப் பாக்கயில தான் தெரிஞ்சது அவமேல இதுக்கு முன்னால வீசுன வாசனை வீசலைன்னு.. மொத்தமா பட்டணக்கார அண்ணனை மறந்துட்டா. கரிசக்காட்டு பொம்பளை ஒடம்புல வீசுற கம்முக்கூட்டு நெடிதான் அவமேல்யும் வீசுச்சு. இந்த ஏழெட்டு வருச வாழ்க்கையில நாலுவயசுல ஒரு பொட்டப்புள்ளையும் ரெண்டு வயசுல ஒரு பயலுமா மொகம் பாத்து பேசாமேய பெத்துப் போட்டுட்டோம். வா போன்னு கூப்புட்டு இப்பதான் செவந்தின்னு பேர் சொல்லி கூப்புடுற அளவுக்கு வந்துருக்கேன்.

நாலாவது நாளு காலையில போலீஸெல்லாம் வாபஸாகி ஊரைவிட்டு போவது தூரத்தில் தெரிஞ்சது. நாலு வண்டிகள் ஒன்னுபின்னால ஒன்னாய்...

''அடைக்க அம்புட்டு போலீஸூம் நம்ம ஊருக்குள்ளதான் இருந்திருக்கானுங்க போல இருக்கு...''

''காத்தானையும் நாலு ஆளையும் தலைவரு முன்னால கோட்டுல ஒப்படைச்சாச்சு.. மதுரையில தங்கி தெனமும் கையெழுத்து போடனும்னு ஜாமின் குடுத்திருக்காகளாம். ஊருக்குள்ள போனதும் ரூபாயை வசூல் பிரிச்சுக்கிட்டு மதுரைக்கு



படிப்பகம்

www.padippakam.com

ஓடனும்''-ஊர் மந்தையில நின்னு வெள்ளை வீச காட்டுக்குள் காத்துக் கெடந்தாங்க. போலீஸ் போற மாதிரி போயி திரும்பி வந்துருமோங்குற பயம் உள்ளுக்குள்ள இருந்துச்சு. ஊருல ஒண்ணும் பிரச்சனையில்லை தைரியமா வரலாம்னு வேட்டிய கம்புல கெட்டி மந்தையில இருந்து பொம்பளையாட்க வீசுன உடனே ஆம்பளையாட்க ஆபத்தில்லைன்னு காட்டை விட்டு ஊருக்குள்ள ஓடிவந்துருவாக.. வெள்ளை வீச்சு கண்ணுக்கு தெரிஞ்சதும் அம்புட்டுப் பேரும் ஊரைப் பாத்து ஓடுனாக.

வெள்ளை வீட்டுக்குள் நுழைஞ்சான். பிள்ளை கள் மீதெல்லாம் பவுடர் வாசனை. அடுப்பங்கரையில் விருந் தாளிகள் வந்தால் புழங்கப்படும் எவர்சில்வர் சாமான்கள்..''

''பட்டணக்கரையில படிக்கிற பய எப்படி நம்பளைப்போல ஈயத்தட்டுலேயும் கும்பாலேயும் கஞ்சிகுடிப்பான். அதான் உறுத்துல செவந்தி சீட்டுப் போட்டு சிலுவருல தட்டெடுத்து வெச்சிருக்கா...''

கே.சாமின்னு பேர் வெட்டுன தட்டு வெலக்கி சுத்தமாய் அடுப்படி மேல் பரணில் டாலடித்தது.

''யாரு வந்தது?''

அரசியல் தெளிவு பெற
ஜனசக்தி
படியுங்கள்

செவந்தி பதில் சொல்லாமல் கைப்பிள்ளையும் அதுவுமாய் அடுப்படி வாசலில் நின்னு சுவத்துகாரையை சுரண்டினாள். பெரிய பிள்ளைதான் பதில் சொன்னாள்.

''பெரியப்பா வந்துருந்துச்சு.''

அண்ணன் போலீஸ் உத்தியோ கத்துல சேந்திருந்து முழுசுமாய் அயத்துப்போனது. பட்டுன்னு ஞாபகத்துக்கு வந்ததும் உடம்பு வியர்த்தது.

''காவலுக்கு வந்த போலீஸ்ல பெரியப்பாதான் பெரிய ஆபீசராம்.. திங்க முட்டாஸ் கொட்டான், பிஸ்கெட்டெல்லாம் வாங்கியாந்துச்சு..தம்பிக்கு சட்டை, எனக்கு பாவாடை துணி, அம்மாவுக்கு சீலை..உனக்கு கூட சட்டைத்துணி கொண்டாந்திருக்கு...'' பிள்ளை அறை வீட்டுக்குள் ஓடிப்போய் எல்லாம் மொத்தமாயிருந்த தார்ப்பெட்டியை தூக்கிக்கொண்டு வந்து அவன் முன்னாடி வைக்க வெள்ளை முழுவதுமாய் பொறுமையிழந்துசெவந்தி பக்கத்துல வந்தப்ப அவகிட்டருந்து ஒரு வாசனை வந்தது. ...லைப்பாய் சோப்பு வாசனை.



படிப்பகம்

www.padippakam.com

விமர்சனம்

## தன்னனானே ஆகஸ்ட் 96 நாட்டுப்புற விளையாட்டுச் சிறப்பிதழ்

**(காவ்யா வெளியீடு, இந்திரா நகர், பெங்களூர். விலை ரூ.25)**

மதிப்புரைக்காக வந்துள்ள இந்த இதழ் இது. நாட்டுப்புறவியல் ஆய்வில் அதிகம் கவனம் செலுத்தாமல் இருக்கக்கூடிய பகுதியான நாட்டுப்புறவிளையாட்டுகளைப் பற்றிய ஆய்வுகளைத் தொகுத்து அளித்துள்ளார் இவ்விதழின் சிறப்பு ஆசிரியர் டாக்டர் சு. சக்திவேல் அவர்கள். இது அரியதொரு முயற்சி. இந்த இதழில் அடங்கியுள்ள கட்டுரைகள் மூலம் நாட்டுபுறவிளையாட்டுகள் பற்றிய ஆய்வுகள் எந்த அளவில் இருக்கின்றன என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. இந்தத் தொகுப்பில் 12 கட்டுரைகள் அடங்கியுள்ளன. தமிழ் நாட்டுப்புறவி யலின் தந்தை எனப்படும் பேராசிரியர் நா.வானமாமலையின் தொகுப்பில் இருந்து விளையாட்டுப் பாடல்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

கட்டுரைகளை படிக்கும் பொழுது இரு வகையான முயற்சிகளைக் காண முடிகிறது. ஒன்று விளையாட்டுக்களை தரம் பிரித்து, வகைப்படுத்தி வர்ணிக்கும்போக்கு.மற்றொன்று விளையாட்டுகளை விளக்க முயற்சிப்பது. முனைவர்கள் சு.சக்திவேலின் ''திருநெல்வேலி மாவட்ட விளையாட்டுகள்'' அரு.மருததுரையின் ''நாட்டுப்புறச் சிறுவர் விளையாட்டுகள்'' ஆ.சண்முகத்தின் நாட்டுப்புறச் சிறுவர் விளையாட்டுப் பகுப்பாய்வு, ந.சாந்தியின் மகளிர் விளையாட்டுகள், அ.சிவகாமசுந்தரியின் சங்க இலக்கியத்தில் விளையாட்டுகள், சா.வளவனின் நாட்டுப்புற விளையாட்டுகள் வளர்ச்சி, வி.பிரிட்டோவின் நாட்டுப்புற விளையாட்டுகளும் அரங்கக் கூறுபாடுகளும், ப.நடராசனின் சேவற்கட்டு, சு.சண்முகசுந்தரத்தின் நாட்டுப்புற விளையாட்டுகள், கி.ராஜநாராயணனின் விளையாட்டுகள் ஆகியன இந்தவகை விளையாட்டுகளை வர்ணித்து வகைப்படுத்தும் போக்கில் அமைந்துள்ளன. தி.கு. இரவிச்சந்திரனின் கோட்டி கிரிக்கெட்; பிராய்டி ஒப்பாய்வு என்பதும், ப.நடராசனின் உளவியல் சமூகவியல் அரசியல் பார்வையில் தமிழக நாட்டுப்புற விளையாட்டுகள் என்பதும் ஒரு கோட்பாட்டின் அடிப்படையில் விளையாட்டுக்களில் மறைந்திருக்கும் உண்மையை விளக்கும் போக்கில் அமைந்துள்ளன.

இக்கட்டுரைகள் தமிழ் நாட்டார் வழக்காற்றியலுக்குப் புதிய தகவல்கள் சேர்ப்பவையாக அமைந்துள்ளன. இந்த விளையாட்டுகளைப் பற்றிய தகவல்களைச் சேகரிப்பதே இந்தக் காலகட்டத்தில் பெரியதொரு முயற்சியாகும். அந்தமுறையால் இக்கட்டுரையாளர்கள் கள ஆய்வு செய்து விளையாட்டுகள் பற்றிய விவரங்களைச் சேகரித்து உள்ளனர். இந்த முதல் கட்ட பணியானது பின்னர் வரவிருக்கும் ஆய்வாளர்களுக்கு மிகப் பெரிய உதவியைச்



படிப்பகம்

www.padippakam.com

செய்துள்ளனர்.

இக்கட்டுரைகளைப் படிக்கும் பொழுது ஆய்வு முறையில் சிலபோக்குகள் கையாளப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. உதாரணமாக ''கோட்டி கிரிக்கெட்: பிராய்டிய ஒப்பாய்வு'' என்ற கட்டுரையானது உளவியல் பார்வையில் இந்த இரு விளையாட்டுக்களையும் ஆய்வு செய்வதாக அமைந்துள்ளது. கோட்டியும், கிரிக்கெட்டும் காயாடிப்பு அச்சம் என்ற பிராய்டிய உண்மையை அடிப்படையாகக் கொண்ட விளையாட்டுக் கள் என்பதை ஆய்வாளர் பல சான்றுகளைக் காட்டி நிறுவியுள்ளார். இந்த பிராய்டிய ஆய்வு வரவேற்கத்தக்கது ஆகும். ஆனால் இந்த உண்மை மற்ற விளையாட்டுக்களுக்கும் பொருந்துமா என்பதையும் பொருத்திப் பார்த்து ஆராயும் வாய்ப்பு உள்ளதா என்பதையும் காணவேண்டும் மற்றொரு போக்கு சமூகவியல் அரசியல் பார்வையில் ஆராய்வது காணப்படுகிறது. ஜோப் ஜவஹரின் கட்டுரை அத்தகையது, அவர் சில் விளையாட்டுகளை அரசியல் பின்னணியில் ஆராய்ந்து காண்கிறார். ஏனைய கட்டுரைகள் உருவவியல் போக்கினை உடை யவை. இதில் அமைப்பியல் ஆய்வும் அடங்கிவிடுகிறது. இந்த மூன்று போக்குகளைப் பெற்றதாக இக்கட்டுரைத் தொகுப்பு விளங்குகிறது.

திறமையாகவும், தெளிவாகவும் பதிப்பு செய்த இத்தொகுப்பில் ஒரு விஷயத்தைப் பதிப்பாசிரியர் தவிர்த்திருக்கலாம். விளையாட்டுகளை வகைப்படுத்தும் போது இரு ஆசிரியர்களும் ஒரே விஷயத்தை கூறுவதை தவிர்த்திருக்க வேண்டும்.

இதைத் தவிர இத்தொகுப்பினை பாராட்டி வரவேற்கக் கடமைப்பட்டுள் ளோம். இது அவசியமான முயற்சி.

-எஸ். தோதாத்ரி

**'மீண்டும் வந்த சோளகம்'**

***(நாவல் - செ.யோகநாதன் வெளியீடு: படைப்பாளிகள் பதிப்பகம். 89/6 நடராஜன் தெரு,தனலட்சுமி காலனி எக்ஸ்டென்ஷன்ஸ், வடபழனி, சென்னை-26.*** விலை ரூ: 32)

தேர்தல் வெப்பம் எங்கும் அலையடித்த நேரம்; பேருந்தின் உள்ளே 'காத்துப்' போக வர முடியாத அளவு கூட்டம். பேருந்துவழியே பார்த்த போது, கருத்து, மின்னல், பின்னலாகி, கூடியிருந்த மழை மேகங்கள் கலைந்து கொண்டிருந்தன. உட்கார்ந்திருந்த பெரியவர், கண்களைச் சுருக்கியபடி, சொன்னார்:

''இல்லை; இந்த வருஷமும் இல்லை''

நடுத்தர வயதுப் பொம்பிளை சொல்வாள். ''பக்கத்துப் புளியங்குடியில தண்ணி புரள அடிச்சிருக்கு மழை. இங்க இல்லையே யய்யா''

''இல்லை; இந்த வருஷமும் இல்லை'' தன் புலம்பல்போல் பெரியவ ரிடமிருந்து வந்தது.

''அதானய்யா, அங்கே தெக்கு வீச்சா நல்ல அடி- மழை ஒரு பக்கமா,



படிப்பகம்

www.padippakam.com

கோபிச்சுக்கிட்டு போறது மாதிரி இல்லை, போகுது.''

நட்டமாக நிற்க முடியவில்லை அந்தப்பெண்ணுக்கு. கால் குடைச்சல், கைகுடைச்சல். ஆனால் தேர்தல் சூடு தகிக்கிறபோதும், அதிவேக விரைவு வண்டியில் பயணம் போகிற வேளையிலும், வாழ்வின் எல்லாக் குடைச்சலுக்கும் அதி மருந்தாக அவர்கள் சிந்தனை, மழையையே தடவிக் கொண்டிருந்தது; அந்தப் பெரியவர், துன்பலயிப்பாக, ''இல்லை; இந்த வருஷமும் இல்லை'' என்று இழுத்து, அழுத்தி உச்சரித்ததை, எந்த ஓவியனும் எழுதி விடமுடியாது; எந்த நடிகனும் சொல்லி விடமுடியாது.

ஈழத்தில் போரின் உக்கிரம் அண்டம் வரை வீசியடிக்கிறது. அந்தத் தீபகற்பத்திற்கு வெளியே, தூக்கியெறியப்பட்ட வாழ்வு உலக நாடுகளெங்கனும் சிதறிக் கிடக்கிறது. எல்லாமே சின்னபின்னமாகிப் போன போதும், நிலத்தையும் கடலையும் மட்டும் உயிர் வாழ்தலுக்கான மூலமாகக் கொண்டிருப்பவர்கள், இங்கே இருக்கிற சம்சாரிகளைப் போலவே, அந்த இயற்கையை மட்டுமே, அதன் மாற்றங்களை மட்டுமே நம்பி வாழ்வைத் தக்க வைக்க வேண்டியிருக்கிறது.

தமிழ்நாட்டில் அக்னி நட்சத்திரம்; ஈழத்தில் சோளகம்; யாழ்ப்பாணத்தின் வறண்ட பருவகாலம் இது. பரவைக் கடல் பகுதியில் 'சோளகம் காற்று' வீசுகிற போது-அந்த வறண்ட காலத்தில், கடலை நம்பி இருப்பவர்களின் வாழ்வு கந்தரகூளமாகி விடுகிறது.

ஒவ்வொரு வருசமும் சோளகம் வீசுகிறது; கடல் வற்றுகிறது; வாழ்க்கைப் புயல் வீசுகிறது. கத்தரிவெயில் என்ற அக்னிப்புயல் அடிக்கிறபோது, அதை மீனவர்கள் எதிர்கொள்ளும் தன்மைகள், எதிர்கொள்கையில் ஏற்படும் உறவுச்சேதாரங்கள், குணச்சிதைவுகள், புதுமையைத் தேடும் வேட்கை நாவலில் காட்டப்படுகின்றன. எட்டுப் பிள்ளைகள் பெற்றாலும், கொஞ்சமும் கூட்டாமல், குறைக்காமல் எல்லோரிடமும் எல்லாக் காலத்தும் பாசம் கொட்டுகிற பூரணம், கணவனின் கோபத்துக்கும் காமத்துக்கும் ஈடுகொடுக்கிற அதே பூரணம், சோளகம் வரும் முன்பே, அதை எதிர்கொள்ள வேண்டிய வேதனையில் எரிச்சலாகிற கடல்வாழ் மனிதன் கணபதி, பிறகு அவன் போக்கில் ஏற்படும் மாற்றம், வாழ்வைத் தள்ளாட வைக்கும் வள்ளங்களுக் குப்பத்தில் கடலைப்புறம் காணும் இயந்திரப் படகுகளால் அந்த மக்களின் தள்ளாடும் வாழ்க்கையை மீட்டெடுக்க புதியன தேடும் இளந்தாரிகள் சண்முகம், ஆறுமுகம்-என்று ஈழத்தின் மீனவ சமூகம் பற்றிய வாழ்க்கை, அதன் உதிரத்தோடும், உந்திச் சுழியோடும், நிணத்தோடும் வெளிப்பட்டிருக்கிறது.

முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன், யதார்த்த இலக்கியப் படைப்பாளியான செ.யோகநாதன் 'சோளகம்' என்றொரு கதை எழுதினார். பலராலும் பாராட்டப் பெற்ற சிறுகதை- இப்பொழுது முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு பின், 'மீண்டும் வந்த சோளகம்' அந்த கடல்வாழ் மக்களின் வாழ்வை நின்று, நிலைத்து, நீண்ட காலத்திற்கு பேசிச் செல்லும்.

-பா. செயப்பிரகாசம்



படிப்பகம்

www.padippakam.com

## அவள் வாழத்தான் போகிறாள்

***(நாவல்- மாத்தளை சோமு, வெளியிட்டோர்: தமிழ்க் குரல் பதிப்பகம், பி-15, ஐந்தாவது பிரதான சாலை, இராமலிங்க நகர்,திருச்சி- 620 003. விலை:ரூ.50-00)***

இன்றைக்குக் கால்வாசிப் படிக்கலாம், நாளைக்குக் கொஞ்சம், அப்புறம் கொஞ்சம் படித்து முடிக்கலாம் என்று கையில் எடுத்தேன்.

ஆனால் ஒரே மூச்சில் படித்து முடித்தேன்! காந்தமாய் ஈர்த்துவிட்டது இந்த நாவல்!

சுரண்டப்படுகிறோம் என்பதையே உணராமல், சுரண்டலுக்கு ஆட்படும் தேயிலைத் தோட்ட ஊழியர்கள், சில நல்லோரின் தூண்டுதலினால் கிளர்ந்தெழுந்து போர்க்கொடி உயர்த்துவதை யதார்த்தமாகச் சொல்லிச் செல்கிறார் ஆசிரியர்.

தொழிலாளர் கூட்டத்தில் ஒரு பள்ளி ஆசிரியர் பேசுகிறார்...

''எல்லாத் தோட்டங்களிலும் ஒரே வகையான சுரண்டல்தான் இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் நான் கூறுகின்றேன், தோட்டங்களில் இரண்டு வகையான சுரண்டல்கள் இருக்கின்றன. ஒன்று உழைப்பைத் தம் வசப்படுத்தும் சுரண்டல், மற்றது அறிவை இல்லாமலாக்கும் சுரண்டல்.

.....நீங்கள் எல்லாரும் நாலு எழுத்துக்கூடப் படிக்க வசதி இல்லாமல் செய்துவிட்டார்கள். தோட்டத்து ஸ்கூலில் படித்து வெளியே வந்தால் பேர் பதியச் சரியாக இருக்கும். பேர் பதிந்து வேலை செய்தால், லயமும் தோட்டமும் தான் உலகமாக இருக்கும். சாகும் வரைக்கும் அதுதான் உலகம். வெளியே என்ன நடக்கிறது என்று தெரியாது. கிணற்றுத் தவளைகளாக இருக்க வேண்டியதுதான். இத்தனை காலமும் இப்படித்தான் அறிவு சுரண்டப்பட்டு வாழ்ந்திருக்கிறோம். இனியாவது அதை மாற்றியமைக்க வேண்டும்!''

ராமு என்ற தேயிலைத் தோட்ட ஊழியன் தன் சக தொழிலாளர்களுக்காகப் போராடுகிறான்! துரையை எதிர்க்கிறான்! பார்வதி என்ற விதவைப் பெண்ணுக்கும் வாழ்வு தருகிறான்!

அவனுக்குத்தான் எத்தனை எதிர்ப்புகள்!

மாத்தளை சோமுவின் எழுத்தில் ஒரு இனிமை, ஒரு எளிமை விரவிக்கிடக்கிறது. இவரது வர்ணனைகள் ஆர்ப்பாட்டமற்றவை. ஆனால் அழுத்தமானவை!

சில உதாரணங்கள்...

'சேலை முந்தனையால் தனது கண்களைத் துடைத்துவிட்டுப் பார்வதி குசினிக்குள் சென்று விரித்தே கிடந்த பழைய சாக்கில் உட்கார்ந்தாள். அவள் எவ்வளவோ முயன்றும் விரட்ட-விரட்ட செத்த மீனில் குவிகின்ற ஈக்களைப்



படிப்பகம்

www.padippakam.com

போல் நினைவுகள் அவளை மொய்த்தபடி இருந்தன.'

....'பாதை நெடுக நிறைய வியாபாரிகள் கடை விரித்திருந்தார்கள். டீ குடிக்க, வடை பலகாரம் சாப்பிட, வளையல் மாட்டிக்கொள்ள, சாமி படங்கள்- நடிக நடிகைகள் படங்கள் வாங்க விதவிதமான பொம்மைகள், முகமூடிகள் வாங்கிக் கொள்ள பல கடைகள் இருந்தன. கையிலுள்ளவர்கள் அந்தப் பக்கம் கால்வைத்தார்கள். இல்லாதவர்கள் பார்க்கக்கூடப் பயந்தார்கள்....'

'வெளிச்சம் வந்து விடிந்துவிட்டது என்று புரிந்துகொள்வதற்கு முன்னரே பறவைகளின் மொழிகள் விடிந்து கொண்டிருக்கிறது என்று சொல்லிக் கொண்டிருந்தன.'

०००००००

'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு' என்பதை உணர்த்துகிறார் ஆசிரியர்!

தொழிசங்கப் பிரதிநிதி பேசுகிறார்-

'இந்த நாட்டில் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை மிக மோசமானது; போராட்டமானது! தொழில்லாளர்கள் வயிற்றுக்காகவும் போராட வேண்டி யிருக்கிறது. அதே நேரத்தில் வாழ்வதற்காகவும் போராட வேண்டியிருக்கிறது. இங்கே இறந்துபோன ஒரு தொழிலாளி அதாவது சாமிக்கண்ணு சம்சாரம் வாழ்வதற்காகப் போராடித் தோற்று மரணமடைந்துவிட்டார். தோட்டத்துத் துரை, தோட்டத்து லொறியை(லாரியைக்) கொடுத்திருந்தால், ஒரு வேளை இந்தத் தொழிலாளி பிழைத்திருக்கலாம்!

...தொழிலாளர்கள் மத்தியில் ஒற்றுமை வந்தால் இது நடந்திருக்காது. தொழிலாளர்களின் பிளவில் நிர்வாகம் வெற்றிகாண நினைக்கிறது. உங்களுக்குள் தனிப்பட்ட முறையில் கருத்து முரண்பாடுகள் இருக்கலாம். ஆனால் அவைகளைப் பொதுப்போராட்டத்தில் முன் வைக்கக்கூடாது. போராட்டம் வெற்றி பெற்றால் எல்லாத் தொழிலாளிகளுக்குந்தான் பலன் கிடைக்கும். இதனை நீங்கள் ஞாபகத்தில் வைக்க வேண்டும். எனவே எல்லோரும் ஒன்று சேருங்கள்!

தேயிலைத் தோட்ட நிர்வாகம் அநீதியாக நடந்து கொள்கிறது. ராமுவும் நண்பர்களும் கட்டிய நூலகத்தை எரிக்கிறது. ராமுவின் வேலை பறிக்கப்படுகிறது. அவன் காதலி பார்வதியும் வேலை இழக்கிறாள். இருந்தாலும் அவர்கள் அஞ்சவில்லை. போராடுகிறார்கள்! ஒருபுதிய அத்தியாயத்தை எழுதுகிறார்கள்.

- எஸ்.குரு

**'பூக்கள் பற்றிய தகவல்கள்'**

***(கவிதைகள்- மகுடேசுவரன் - கனவுகள் வெளியீடு, 8/207.சி, பாண்டியன் நகர், திருப்பூர்- 641 602. விலை ரூ. 20)***

கவிதை எழுதுபவர்களும், அல்லது அப்படி எழுதுவதாகச் சொல்லிக் கொள்பவர்களுமோ நிறைந்து கிடக்கிற காலம் இது. மூன்று அல்லது நான்கு



படிப்பகம்

www.padippakam.com

வரியில் ஒரு புளித்துப் போன உவமையை எழுதலாம்; கவிதை எனப் பெயரிட்டு, முகவரிப்பகுதியில் கூப்பனை ஒட்டி அனுப்பிவிடலாம்; ஏதேனும் நாளிதழின் ஞாயிறு புத்தகத்தில் வெளிவந்துவிட்டால் போதும்; அதுவெல்லாம் கவிதை. எழுதுகிறவர்கள் கவிஞர்கள் என்று இன்னும் கூடப் பலர் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். இப்படியாகப்பட்டவர்கள் தயைகூர்ந்து படிக்க/ வேண்டிய புத்தகம் அண்மையில் வெளிவந்திருக்கிறது.

புத்தகத்தின் பெயர் 'பூக்கள் பற்றிய தகவல்கள்'; எழுதியிருப்பவர் மகுடேசுவரன்; இந்த தலைமுறைக் கவிஞர்.

நகரமயமான கலாச்சாரச் சீரழிவுகளுக்கு ஆட்பட்டுப் போயிருக்கிறது இலக்கியச் சூழல். இதன் மத்தியில் அடர்த்தியான கவிதானுபவத்தை அங்கங்கே கொஞ்சம் கிராமப் பின்னணியோடு தந்து வெற்றி பெற்றிருக்கிறார் மகுடேசுவரன்.

கவிதை எழுதுவதாலேயே சிறகுகளும், ஒளிவட்டமும் உண்டாகிவிடுவதாய்க் கற்பனையில் சஞ்சரிக்காதவர் இவர். வாழ்க்கையை நேசிக்கிற, நேசிக்கத் தூண்டுகிற விதமாய்க் கவிதை வரிகள்.

வார்த்தைகளைக் கோர்த்து நெய்யப்பட்ட அச்சுத் தொகுப்பாக இன்றி வித்தியாசமான கருப்பொருள்கள்; கூடவே அதை வெளிப்படுத்தத் தேர்ந்துகொண்ட உத்திகள்; இரண்டும் சேர்ந்து கவிதைகளை மனசுக்குள் உட்காரச் செய்கின்றன.

*'எச்சில் இலைபிரித்து*
*மிச்சங் காணாது ஏமாந்தவனின்*
*பசிக்கு*
*எப்படி நான்*
*கவிதைகள் பரிமாறட்டும்...?*
*இனியெனக்குக்*
*கவிதைகள் வாய்க்காது போகட்டும்''*

என்று கவிதையை விட மகோன்னதமான விஷயம் இருக்கிறது என்று துணிச்சலோடு பேசும்போது, கவிஞரின் யதார்த்தமான மனிதநேயம், கவிதையை சிகரத்தில் கொண்டு சேர்க்கிறது.

கவிதைத் தொகுப்பு என்று நினைக்கிற மாத்திரத்தில் பழக்கதோஷமாய் 'வேலையில்லாத் திண்டாட்டம், வரதட்சணைக் கொடுமை, அஞ்சலிக் கவிதைகள் இத்யாதிகள்' என்கிற சமாச்சாரங்கள் தான் சட்டென்று ஞாபகத்துக்கு வரும். மிஞ்சிபோனால் சுயதேடல், கழிவிரக்கம் இந்த நிலையோடு நின்று போகும்.

இவைகளிலிருந்து மாறுபட்டு இருப்பதும்கூட கவனம் கொள்ள வைப்பதற்குக் காரணமாக இருக்கிறது.

கிராமத்து வேலைகள் எல்லாவற்றையும் எவ்வித இழிவுமின்றி சம்மதிக்கிற மனசுக்குச் சொந்தக்காரர்;

*'அதை விடுத்தென்னை*



படிப்பகம்

www.padippakam.com

கொதிகாற்றலையும் ஆலைக்கு

கூலிக்கு ஓடச் சொல்கிறீர்களே.'' என்று வேதனையோடு கேள்வி எழுப்புகிறார். இதனை யாரொரு தொழிலாளியின் குரலாகவும் கற்பனை செய்து கொள்ளலாம்.

தன்னுடைய வெகுநாள் தோழனான மரத்தை அறிமுகப்படுத்துகிறபொழுது

'என் தோழன்
ஒரு முறை கிளை தந்தான்
என் தாயின் கொடுமை தாளாத
எனதன்புப்பாட்டி
உயிர் போக்கிக்கொள்ள' என்று முடிக்கிறபோதும்,

சித்தம் விரும்பியவாறெல்லாம் பெண்மையின் செழுமைகளைச் சுகிக்கிற மனிதனிடம், விரைகள் நசுக்கப்பட்ட 'பசுச்சுகம் காணாத காளைகளுக்குப் பதில் சொல்லுங்கள் ஐயா'' எனக் கேள்வி எழுப்புகிறபோதும் பக்குவம் பற்றாத பாப்பாவிடம் 'அரளிவிதையை இன்னும் நன்றாக அரை பாப்பா' என்ற அறிவுரைக்கிற கவிதையிலும் அதிர்ச்சியூட்டும் அல்லது திருப்பத்தை ஏற்படுத்துகிற முடிவினை உத்தியாகக் கையாள்வது சிறப்பாகத் இருக்கிறது.

''அஞ்சு பாட்டு
ஆறு பைட்டு
தொறந்து காட்டும் சூப்பர் சைட்டு'

என்று தமிழ்சினிமாவின் அவலட்சணங்களை 'எள்ளல்' நடையுடன் சொல்லும்போது நமக்குள் பீறிடுகிறது சிரிப்பு; 'பிரிவுகளுக்குப்பின் தகவலற்றுப் போய் விடக்கூடாதா?'' எனக் கலங்குகிறபோது நமக்குள் சூழ்கிறது ஏக்கம். இவை எல்லாம் இன்னும் கவிதையின் பச்சையம் உலர்ந்து போய்விடவில்லை என்பதற்கான சாட்சியங்கள்.

தவிரவும் 'செல்லம்மாவும் என் காதலும்', 'நீங்கள் என் கடவுளைச் சேவியுங்கள்', 'புறாக்கள் தரையிறங்க வேண்டும்' ஆகிய தலைப்புகள் வித்தியாசம் காட்டுகின்றன; கவிதைகள் ரசிக்கத் தகுந்ததாய் இருக்கின்றன.

மிரட்டும் இருண்மையோ அலட்சியப்படுத்திவிடக்கூடிய மலினமான உரைநடைத் தன்மையோ இல்லாமல் ஆழ்ந்த சொல்லாட்சியுடன் அதே சமயம் இயல்பாய் இருப்பதுதான் மகுடேசுவரனின் வெற்றிக்கான சூத்திரம்.

ஓர் நல்ல கவிதாபூர்வமான நண்பனை, தோழனை வார்த்தைகளால் அறிமுகப்படுத்தி தரிசித்துவிடச் செய்ய முடியுமா? முடியாது. பழகிப்பார்க்க வேண்டும்.

அப்படித்தான்...நீங்கள் இந்தப் புத்தகத்தைப் படித்துப் பார்க்க வேண்டும்.

-இரா. இலட்சுமணன்



படிப்பகம்

www.padippakam.com

# பொன்னீலன் பதில்கள்

எ.எம்.சாலன், கொச்சி

ஒரு முற்போக்கு எழுத்தாளர் வளர்ந்து வரும் தலித் இலக்கியத்தை எவ்வாறு அணுக வேண்டும் என கொஞ்சம் விரிவாகவும் தெளிவாகவும் சொல்ல முடியுமா?

தலித்துகளின் சமகாலப் பிரச்சினைகள் மீது மக்களின் கவனத்தைத் திருப்பி அவர்களின் விடுதலையைத் துரிதப்படுத்தும் நோக்கத்துடன் எழுதப்படும் இலக்கியமே தலித்து இலக்கியம். இது முற்போக்கு இலக்கியத்தின் ஒரு கிளை தான். யதார்த்த இலக்கியம் அல்லது முற்போக்கு இலக்கியம் என்று சொல்லும் போது அதில் வர்க்க முரண்பாடும் போராட்டமும் பிரதானப்படுகிறது. இதனால் சில சமயம் தலித்துகளின் ஜாதிய விடுதலை சம்பந்தமான பார்வை ஊனப்படுகிறது என்பது தலித்து இலக்கியவாதிகளின் பார்வை. அது ஓரளவு ஏற்றுக்கொள்ளத் தக்கதுதான். ஆகவே தலித்து இலக்கியம் என்ற ஒரு பிரிவு இன்று தேவையே.

அடுத்து தலித்து இலக்கியத்தை யார் எழுதுவது என்பது பற்றி. தலித்துப் பிரச்சினை நீண்ட காலமாகவே சமூகத்தில் இருந்து வந்திருக்கிறது. ஆனால் தலித்துப் பார்வை கொண்ட தலித்து விடுதலை இலக்கியம் சமீப காலமாகத்தான் வரத் தொடங்கியிருக்கிறது. ஒரு சில முற்போக்காளர்களைத் தவிர பிறர் தலித்துப் பிரச்சினைகளை இலக்கிய ரீதியாகச் சரியாகக் கையாளவில்லை என்கிறார்கள் தலித்துவிமர்சகர்கள். இந்தக் குற்றச்சாட்டில் நியாயம் இல்லாமல் இல்லை. உதாரணமாக இலக்கியத்தில் வரும் தலித்துப் பாத்திரங்கள்-அவை எவ்வளவு மூத்த பாத்திரங்களானாலும்-அவன் இவன் என்று அறிமுகம் செய்யும் இலக்கிய ஆசிரியர்கள் இன்னும் கூட இருக்கிறார்கள். ஆகவே தலித்து இலக்கியத்தைத் தலித்துதான் எழுத வேண்டும் என்று அவர்கள் முன்வைக்கும் விவாதம் அவர்கள் அளவில் சரியே.

ஆனால் அவர்கள் யாரையும் கையைப் பிடித்துத் தடுக்கவில்லை. தலித்துப் பிரச்சினைகளைக் கையாளும் அறிவும், உணர்வும், அனுபவமும் உள்ள எந்த எழுத்தாளரும் அதை எழுதலாம். எழுதி தலித்துகளையே வியக்கவைக்கலாம். யாரும் அதை தடைப்படுத்த முடியாது.



படிப்பகம்

www.padippakam.com

தவிர, தலித்து இலக்கியங்களைத் தலித்துகள் தான் படிக்க வேண்டும் என்று அவர்கள் சொல்லுகிறார்களா? பின் ஏன் கவலை?

தலித்துகளும் இந்தியத் திருநாட்டின் மேண்மைமிகு மக்கட் பிரிவினர். நம் சகோதரர்கள். அவர்கள் முழு ''விடுதலை பெறுவது இந்திய சமூக விடுதலையின் தவிர்க்க இயலாத அடிப்படை, என்ற ஆழமான உணர்ச்சி இருந்தால் போதும், தலித்து தலித்து அல்லாதவர் என்றே பிரச்சினையே எழாது.

**வெலூர் ஆர்.பார்த்திபன், சேத்துப்பட்டு.**

எழுத்தாளர் சு.சமுத்திரம் பற்றி?

கலை நயத்தைப்பார்க்கிலும், கருத்து நயம் சிறந்தது என்று மனதார நம்பும் இலக்கியவாதி.

சொல்லுக்கும் செயலுக்கும் வேறுபாடு இல்லாத நேர்மையாளர். அடித்தள மக்களை நேசிக்கும் முற்போக்காளர். விட்டுக்கொடுக்காத போராளி.

**இரா. கிரிதரன், பெரம்பூர்**

தமிழ்ச் சான்றோர் பேரவை சார்பாக நவம்பர் மாதத்தில் தெருக்களில் 'தமிழ்க் கொடி' ஏற்ற இருக்கிறார்கள். நான் தமிழ் நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தைச் சார்ந்தவன். என் தெருவில் 'தமிழ்க் கொடியை' ஏற்றலாமா?

தமிழ் மேம்பாட்டிலும் தமிழனின் மேம்பாட்டிலும் அக்கறை கொண்ட அமைப்புகள் தமிழகத்தில் பல உள்ளன. பொது நோக்கில் ஒவ்வொன்றும் தமிழ் - தமிழன் மேம்பாடு என்கிற லட்சியம் கொண்டிருந்தாலும், ஒவ்வொன்றுக்கும் தனித்தனியான தனித்தன்மை யுள்ள முகம் உண்டு. விழியும் ஒலியும் கூட தனியாக உண்டு. இந்தத் தனித்துவமான முகத்தின் அடையாளமே கொடி. ஏற்றுவதும் ஏற்றாததும் உங்களைப் பொறுத்தது.

**மு.வடுகநாதன்-மயிலாடுதுறை**

ஒருவர் செய்யும் தவறை நேரடியாகச் சுட்டிக்காட்டுவது தவறா? உயர் அதிகாரி என்பதால் அமைதி காத்து, அப்படியே ஏற்றிட வேண்டுமா?

தவறைக் கண்டால் அதைச் சுட்டிக்காட்டுவது நம் கடமை. ஆனால் எப்படிச் சுட்டிக்காட்டினால் சமூகத்துக்கு அதிகப்பயன் கிடைக்கும்



படிப்பகம்

www.padippakam.com

என்று சீர்தூக்கித் தகுந்த முறையில் செய்ய வேண்டும்.

உடனே சுட்டிக்காட்டினால் தவறைத் தவிர்த்து விடலாம் என்றால் உடனேயே சுட்டிக்காட்டலாம். விளைவு விபரீதமாகி விடும் என்று தோன்றினால் தகுந்த நேரம்-சூழ்நிலை பார்த்துச் சுட்டிக்காட்டலாம். தகுந்த நபர் மூலமும் சிலவற்றைச் சுட்டிக்காட்டலாம்.

**வாசகர்களே**

கேள்விபதில் பகுதிக்குத் தரமான கேள்விகளை அஞ்சலட்டையில் எழுதி அனுப்புங்கள். அட்டையில் 'தாமரை - கேள்வி பதில்' எனக் குறிப்பிடுங்கள்.

*-ஆசிரியர்*

மேலதிகாரி என்பதால் அமைதி காத்து அப்படியே ஒன்றி விட்ட பலர் இன்று நடுத்தெருவில் நாறுகிறார்கள். அது கூடவே கூடாது.

அனிதா, பாளையங்கோட்டை.

இலங்கையில் நீங்கள் நா.பார்த்தசாரதி பற்றிப் பேசியது சரியா?

முற்றிலும் தவறு. இலக்கியவாதிகளின் படைப்புகள் பற்றி விவாதிப்பதே நாகரிகம். அவர்களின் தனிப்பட்ட வாழ்வை விமர்சனத்துக்குக் கொண்டு வருவது சரியல்ல. அதிலும் காலம் சென்ற ஒரு இலக்கியவாதியைப் பற்றிப் பேசுவது தவறிலும் தவறு. மிக மிக வருந்துகிறேன்.

நா.பா.விடம் எனக்கு மிகுந்த அன்பும் மரியாதையும் உண்டு.

ரவீந்திரபாரதி-மாம்பாடி.

சாகித்ய அகாதமியின் தமிழ்ப்பிரிவு பற்றி புகார்கள் கூறப்பட்டனவே? இப்போது நிலை என்ன?

இன்னும் பழைய மன்னர்கால முறையில், தலைவர் தன் விருப்பப்படி உறுப்பினர்களை நியமிப்பது தான் பெரிய குறை. தமிழகத்தில் பல போக்குகள் நோக்குகள் கொண்ட இலக்கிய வாதிகளும் இலக்கிய அமைப்புகளும் உள்ளனர். இவர்களின் பிரதிநிதிகளை அழைத்து அவர்களுடன் விவாதித்து, சாகித்ய அகாதமியின் தமிழ்ப்பிரிவு முறையாக அமைக்கப்பட வேண்டும். அதற்கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com

நா.சிவா, முசிறி.

ஜெயகாந்தனுக்கு சாகித்ய அகாதமி சிறப்பு விருது கிடைத்தது பற்றி?

தகுதியுள்ள தமிழனுக்குப் பொருத்தமான காலத்தில் தரப்பட்ட தரமான விருது. கொடுத்தவரும் பெற்றவரும் பாராட்டுக்குரியவர்கள்.

ரசனை என்பது எப்படி இருக்க வேண்டும்?

ரசனை ஆரோக்கியமானதாக இருக்க வேண்டும். ரசனை உணர்வு ரசிப்பவனையும் மேம்படுத்த வேண்டும். ரசிக்கப்படுத்து பவனையும் கவுரவப்படுத்த வேண்டும்.

அ.பசுபதி, பூங்குணம்

இலங்கையின் தமிழ் இலக்கியச் சூழல் தமிழகத்தின் தமிழிலக்கியச் சூழலைவிட மேம்பட்டதாக உள்ளது என்று பேசியிருக்கிறீர்களே, காரணம்?

இலங்கைத் தமிழ்ப் பகுதி கிட்டத்தட்ட கேரளத்தை ஒத்திருக்கிறது. மக்களுடைய கல்வி, பண்பாடு, பழக்க வழக்கங்கள் எல்லாமே கேரளத்தை ஒட்டித்தான் இருக்கின்றன. கேரளத்தைப் போலவே இங்கும் சினிமாவின் ஆதிக்கம் தமிழகத்தைவிட குறைவு. இலக்கியத்தை அனுபவிக்கும் பயிற்சியும் அவர்களுக்கு அதிகம். எனவே இவ்வளவு அரசியல் இடிபாடுகளுக்கிடையிலும் அவர்கள் தங்கள் இலக்கிய ஆர்வத்தைப் பேணிக் கொண்டிருக்கிறார்கள். இலங்கையில் நாங்கள் பேசிய ஒவ்வொரு கூட்டத்திலும் இதை நேரில் கண்டோம்.

மலர்:38, இதழ்:3
நிறுவக ஆசிரியர்:
ப.ஜீவானந்தம்
ஆசிரியர்:
ப.மாணிக்கம்
பொறுப்பாசிரியர்:
சி.மகேந்திரன்

தொடர்பு முகவரி:
தாமரை.
19, செவாலியே சிவாஜி
கணேசன் சாலை,
தி.நகர், சென்னை-17
✆: 4347689

ஜனசக்தி அச்சகம், 161-பிரகாசம் சாலை, சென்னை-108
அச்சிட்டு வெளியிடுபவர்: எஸ்.எஸ்.தியாகராஜன்.



படிப்பகம்

www.padippakam.com

*முதியவர் கதை: 2*





கே.டானியல்

''கொள், கொள்'' என்று இருமி, முக்கி முனகிக் கொண்டே படுக்கையில் புரண்டு நெளிந்த வைரமுத்துக் கிழவன் கைகளை மேலே நீட்டினான். தலை மாட்டில் தணித்து வைக்கப்பட்டிருந்த விளக்கு கையில் தட்டியதும் தட்டுத் தடுமாறி அதன் திரித் தூண்டியைத் திருகி வெளிச்சத்தை வருவித்துக் கொண்டே மறுபடியும் மறுபடியும் இருமினான்.

''பிள்ளை!''

''....''

''பிள்ளை...''

''என்னம்மான்?''

''கொஞ்சம் சுடுதண்ணி தா பிள்ளை!''

சற்று வேளைக்குள் தண்ணீர்க் கிளாசுடன் பிரசன்னமான கண்ணம்மா கிழவனின் தலைமாட்டில் தண்ணீர்க் கிளாசை வைத்துவிட்டு கிழவன் எழுந்திருப்பதற்கான ஒத்தாசையில் ஈடுபட்டாள்.

முழங்கைகளைப் படுக்கையில் குத்தி, தலையை நிமிர்த்தி, பக்கவாட்டில் சரிந்தவாறே கிளாசை எடுத்துத் தண்ணீரைக் குடித்தான். அந்த வீட்டின் அமைதியைக் கிழித்துக் கொண்டே கிழவனின் முடறு முறிப்பு ஓசை தெளிவாகக் கேட்டது.

தண்ணீர் குடித்து முடிவதற்கிடையில் கிழவனுக்குக் களைப்பு வந்துவிட்டது. முனகிக் கொண்டே மறு பக்கம் சரிந்து மறுபடியும் படுத்துக் கொண்டான். கலைந்து கிடந்த கிழவனின் போர்வையை இழுத்து காலிலிருந்து கழுத்து வரை போர்த்திவிட்டு, பக்கத்தேயிருந்த நாற்காலியில் உட்கார்ந்து கிழவனையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள் கண்ணம்மா.

பக்கத்து வீட்டு ரேடியோவில் பத்து மணி ஒலி பரப்பு அப்போது தான் ஆரம்பமாகியது. ''அம்மான் மணி பத்தாச்சுது; மருந்தைக் குடிக்கப் போட்டுப் படுங்கோவேன்'' கிழவனின் தோள் முட்டை இலேசாக வருடிக் கொண்டே கண்ணம்மா கேட்டாள். ''எனக்கு மருந்து வேண்டாம் என்று எத்தனை தரம் சொல்லிப் போட்டேன்''.

''அம்மான்''



படிப்பகம்

www.padippakam.com

''ஏன் பிள்ளை என்னை அலட்டுறாய்? எனக்கு மருந்தும் வேண்டாம் ஒண்ணும் வேண்டாமென்கிறேன், நீ சாப்பிட்டுப் போய் படு பிள்ளை!''

இதற்குமேல் கண்ணம்மாளால் கிழவனை வற்புறுத்த முடியவில்லை. எழுந்து சென்று மேசைமேல் வைக்கப் பட்டிருந்த வெள்ளைப் பேப்பரையும் பேனாவையும் எடுத்து வந்து நாற்காலி யில் உட்கார்ந்து எழுதத் தொடங்கினாள்.

''உடல் நிலை மோசமாயிருக்கிறது, நேற்றையிலிருந்து மருந்தையும் குடிக்க மாட்டேன் என்கிறார். படுக்கையில் கிடந்த இந்த மூன்று மாசத்திலும் நான் சொன்ன படியே கேட்டு வந்தவர் இப்போது என் மேல் எரிந்து விழுகிறார். நீங்கள் யாரா வது ஒருவர் வராவிட்டால் சமாளிக்க என்னால் முடியாது. கடிதம் கண்டதும்...''

இப்படி அவள் எழுதிக் கொண்டே போனாள்.

## 2

வைரமுத்துக் கிழவனுக்கு வயது எழுபதுக்குமேல். சுதுமலையில் 'புகையிலைக்கார'னென்றால் அது வைரமுத்துக் கிழவன் தான். அந்தத் தொழிலில் அவன் ஈடுபட்டு அறுபத்தி ரெண்டு ஆண்டுகள், எட்டு வயதில் கூழாவடிப் பள்ளிக் கூடத்திலிருந்து விடுபட்டு வந்ததும் தோட்டத்துப் பூமியில் காலடி எடுத்து வைத்தவன் இன்று வரை அந்தத் தொழிலில் ஈடுபட்டே வருகிறான்.

வைரமுத்துவுக்கோ, அல்லது அவன் தகப்பன் தம்பருக்கோ, புகையிலைத் தொழில் புதிய தொழிலல்ல. பரம்பரை யாக வந்த தொழில்; பரம்பரையாகவே பேரெடுத்துத் தந்த தொழில்.

சுதுமலை அம்மன் கோவிலின் வடக்கெல்லையுடன் வைரமுத்தனின் வீடு இருந்தது. வீடு என்று அதைச் சொல் வதைவிட குடிசை என்றுதான் சொல்ல லாம். வீட்டின் கிழக்கெல்லையைத் தொட்டபடி - முற்றத்தைத் தொட்ட படிதான் தோட்டமும் இருந்தது. தந்தையும் மகனும் சதா தோட்டத் தோடுதான் கிடப்பார்கள்.

வைரமுத்தனுக்கு வயது இருபதாக இருக்கும் போது தம்பர் கண்களை இறுக மூடிக் கொண்டார். தம்பர் செத்துப் போன போது, விட்டுச் சென்ற கடனுக்கு வீடும், தோட்டத்து நிலமும் ஆனைக் கோட்டை விதானையார் சின்னத்தம் பிக்கு ஈட்டெழுதியாகி விட்டது. நூறு ரூபாயும் ஐந்து வருட வட்டியும் கொடுத்து அதை மீட்டுக்கொள்ள வழி யற்றவனாக வைரமுத்தன் இருந்தான். படுக்கையில் கிடந்த தாயாரையும், கணவனை மலைபோல இழந்து விட்டு வீட்டோடு கிடந்த அக்காளையும் பராமரிக்கவே அவன் உழைப்புச்சரியாகி வந்தது.

''நீ எப்போ வட்டியையும் முதலையும் கொண்டு வாரியோ அப்ப உன் காணியை உனக்கு எழுதி விடுகிறன்'' என்று விதானையார் உறுதி கூறியிருந்தமையால் வைரமுத்தன் சற்று நிம்மதியாக இருந்தான் எப்போதாவது, ஒருநாள் எப்படியும் மீட்டு விடலா மென்ற நம்பிக்கை! ஆனால் வருடங்கள் பதினைந்தாகியும் அந்த ஆசை நிறைவேறியதாயில்லை.

வைரமுத்தனின் முப்பதாவது வயதில் தாயும், முப்பத்தைந்தாவது வயதில், அக்காளும் செத்துப் போனார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

வைரமுத்தன் அந்தக் குடிசையிலே தனியாளாகி விட்டான். உறவினர்கள் என்று சொல்லிக்கொண்டு பலர் வந்து துக்கந் தெரிவித்துப் போனார்கள். ஆனால் அவனது தனிமையைப் போக்க யாரும் முன் வந்ததாயில்லை.

கடைசியில் அடுத்த வீட்டுக்காரர் ஒருவர் வைரமுத்தனுக்குப் பெண் கொடுக்க முன்வந்தார்; அடுத்த வீட்டுக்காரர் வைரமுத்தனுக்கு இரத்த உறவினரல்ல. 'அயல்' என்ற தொடர்பு அவ்வளவுதான்!

சீதேவியும் வைர்முத்தனும் குடும்பமாகி விட்டனர்.

அந்த இளம் தம்பதிகளுக்கு உழைத்து சாப்பிட இருக்கும் கையையும் காலையும் தவிர வேறு சொத்தில்லை. பேருக்கு வீடும், தோட்டத்து நிலமும் இருக்கிறது. ஆனால் ரூபாய் நூறும், பதினைந்து வருட வட்டியும் கொடுத்து மீட்க வேண்டுமே!

## 3

ஒன்று இரண்டு என்று நிதானமாக அடி எடுத்து வைத்து குடும்பத்து எண்ணிக்கை 'ஆறு' ஆகிவிட்டது. மூத்தது இரண்டும் பெண்களாகையால் வெட்டி விடப்பட்ட கள்ளிச்செடிபோல அவர்கள் வளர்ந்து விட்டார்கள். கடைசியாகப் பிறந்தவன் பையன்.

இந்த குசேல புத்திர பாக்கியத்துக்கும் வாட்டியெடுக்கும் வறுமைக் கிடை யேயும் ஈடுவைக்கப்பட்டுள்ள தனது தோட்டத்தைப்பற்றி வைரமுத்தன் ஒருநாளும் மறந்தானில்லை. வாயையும் வயிற்றையும் கட்டி எப்படியோ ரூ.350 சேர்த்து விட்டான். தொகையை மறுநாள் காலையில் செலுத்தி, தோட்டத்தை மீட்டு விட வேண்டுமென்று முடிவு செய்திருந்தான். தன் பூமி தனக்கு சேரப் போவதைப்பற்றி இரவு எல்லாம் என்னென்னவோ கோட்டைகள் கட்டி அவன் தூங்கவேயில்லை.

காலைக் கதிரவன் பொன்னலை பரப்பி தன் பிரயாணத்தைத் துவக்கி னான். விடிந்ததும் விடியாததுமாக வடக்கே துக்க மேளம் கேட்டது. விதானையார் வீட்டுப் பக்கம் கேட்டது. விதானையார் வீட்டுப் பக்கமென்ன விதானையார் வீட்டிலேயே கேட்டது.

''விதானையார் கண்களை மூடிவிட்டாராம்'' என்ற செய்தியைக் கேட்டதும் வைரமுத்துவின் மார்பில் சுரீரென்றது. '' அதுகள் யோக்கியமான பிள்ளைகள் அப்படி செய்யாதுகள்; என்ரை காணியிலே ஆசைப்படாதுகள்'' என்று தன்னைத் தானே சமாளித்துக் கொண்டு மரண வீட்டுக்குப் போய் வந்தான்.

## 4

அடக்க காரியங்கள் முடிந்த மறு நாள் விதானையார் வீட்டுக்குப் போயிருந்த வைரமுத்தன் விதானையாரின் மூத்த மகன் பொன்னம்பலத்திடம் இலேசாக விஷயத்தை வெளியிட்டான்.

''அந்திரெட்டி முடியட்டன் இப்ப என்ன அவசரம்?'' என்று பொன்னம் பலம் பதில் சொல்லியதுடன் ''நாங்கள் அள்ளிக் குடுத்திட்டிருக்கிறம்'' என்று மனதுக்குள் புகைந்து கறுவிக் கொண்டான்.


''அந்திரெட்டி முடிய முந்தி நான் இப்படிக் கேட்டிருக்கப்படாது!'' என்று தன்னைத்தானே நொந்து கொண்டு வைரமுத்து வீடு வந்து சேர்ந்தான்.

ஒரு மாத காலம் கழித்து அப்போது



படிப்பகம்

www.padippakam.com



தான் சலவைசெய்து வந்திருந்த சாயக் கம்பி வேட்டியை உடுத்தி, ரெட்டைக் குறித் துண்டையும் எடுத்துக் கலகலப் பாகத் தோளில் போட்டுக்கொண்டு வைரமுத்தன் விதானையார் வீட்டை நோக்கி விரைந்து கொண்டிருந்தான்.

''ஒரு வேளை ஆண்டுத்திவசம் முடி யட்டெண்டு சொல்லி விடுவாங் களோ!'' என்று மனதுக்குள் பல தடவை சொல்லிக்கொண்டு விதானையார் வீட்டையடையவும் விதானையாரின் மகன் பொன்னம்பலம் வெளி வாசலுக்கு வரவும் சரியாக இருந்தது.

''என்ன வைரமுத்தன்?''

''ஒண்ணுமில்லேங்க, அந்தக் காணிச் சங்கதியை ஒரு வகையா முடிச்சிட்டுப் போகலாமன்னு...''

''ஓ,ஓ, அப்படியா! வட்டியோடே ரூபாய் ஐநூறையும் குடுத்துப் போனால்...''

வைரமுத்தனின் ஈரல் கருகியது. ரூபாய் ஐநூறு!

பொன்னம்பலத்தின் இந்த வார்த் தைக்கு முன்னால் அவனால் அங்கு நீண்ட நேரம் நிற்க முடியவில்லை.

சீதேவியைச் சாகக்சொடுத்து, மூத்த மகள் இரண்டையும் கட்டிக் கொடுத்து மகன் சுப்பிரமணியத்திற்கு உத்தியோக மும் கல்யாணமும் பண்ணிவைக்கும் வரை அந்த ஐநூற்றுக்கு அவனால் வகைசொல்ல முடியவில்லை.

இதற்குள் வருடங்கள் பல உருண்டோடிவிட்டன.

ஒரு தினம் வைரமுத்தன் விதானை யாரின் வீட்டுக்குப் போயிருந்தான். அவனைக் கண்டதும் பொன்னம்பலம்



படிப்பகம்

www.padippakam.com

நீலிக்கண்ணீர் வடித்துக் கூறினான்.

''இனி என்ன செய்யிறது, நீயும் கால காலமாய் அதிலே இருந்திட்டாய் பிள்ளை குட்டிக்காரன். காணிக்கு விலையாக இரண்டாயிரம் தந்திடு. உன் பேரிலே காணியை எழுதிறன்.''

இப்படி விதானையாரின் மகன் பொன்னம்பலம் கடைசியாக வைத்த நிபந்தனையிலே மனதை ஊறப் போட்டுக் கொண்டு வைரமுத்தன் இருந்தான்.

''காசு இரண்டாயிரம் கட்டித் தீக்காம இந்தத் தோட்டத்திலே மண்வெட்டியைப் போடுறதில்லே.'' என்று வைரமுத்தன் சபதம் மேற்கொண்டு வாழ்ந்தான்.

5

வைரமுத்தனின் மூத்த மகன் சுப்பிரமணியத்திற்கு வாய்த்த மனைவி கண்ணம்மா சாந்தமானவள் -பொறுப்புணர்ச்சி உடையவள். அந்தக் குடும்பத்திற்கு அவள் கிடைத்தது பேரதிர்ஷ்டந்தான். அம்மான் அம்மானென்று வைரமுத்தன் மேலும், தம்பி தம்பியென்று வைரமுத்தனின் கடைசிப் பையன் கேது மேலும் உயிரையே வைத்திருந்தாள். அம்மானின் ஆசையைப் பூர்த்தி செய்வதுதான் அவளின் ஆசையெல்லாம். கணவனால் மாதாமாதம் அனுப்பி வைக்கப்பட்ட ரூபா நூறில் அப்படி இப்படியென்று மீதிப்படுத்தி சீட்டுப் போட்டதில் ஆயிரத்தைந் நூறு தேறியது. மிகுதிப் பணத்திற்கும் ஏதோ வழி செய்து வைரமுத்தன் கையிற் கொடுத்தாள். மருமகளின் கையிலிருந்து பணத்தைப் பெற்றுக் கொண்ட போது அவனின் ரோமங்கள் குத்திட்டு, உடம்பெல்லாம் குளிரோடியது.

இளைய மகன் கேதுவும் ஊரில் இல்லை. அண்ணனுடன் பத்து நாட்கள் தங்கி கொழும்புப் பட்டணத்தைப் பார்ப்பதற்காக அவன் போய் விட்டான். கண்ணம்மாவையும் துணைக்கு அழைத்துக் கொண்டு விதானையாரின் வீட்டையடையும் தருவாயில் தான் கண்ணம்மாவின் கழுத்தை வைரமுத்தன் கவனித்தான்.

''புள்ளை தாலிக்கொடி எங்கே?''

தாழ்ந்த குரலில் கேட்டான். கண்ணம்மாவுக்கு உடனே பதில் கூற முடியவில்லை. ஆனாலும் புத்திசாலித்தனமாகப் பதில் சொல்லிவிட்டாள். பின்கோர்க்கி கழன்று விட்டதென்று மருமகள் கூறியது பொய் என்று வைரமுத்துவுக்குத் தெரிந்து விட்டது. குழி விழுந்த கண்களால் மருமகளை ஏறெடுத்துப் பார்த்து விட்டு அவன் நடந்தான்.

புதிதாக உறுதி முடியும்போது ''மருமகளின் சீதனப் பணத்தால் கொண்ட கொள்விலை'' என்று நொத்தாரிசுவிடம் கூறி எழுதிவிக்கும் போது எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள் கண்ணம்மா வாயடைத்துப் போய்ச் சிலையாக நின்றாள்.

இரவெல்லாம் வைரமுத்தனால் கண் தூங்க முடியவில்லை. ''அந்தப் பூமியின் மார்பைக் கிழித்து, உரத்தைத் தூவி கேதுவை மாடாயுழைக்க வைத்து...'' இப்படி அவன் எத்தனையோ நினைத்தான். தூக்கம் எப்படி வரும்? மனதில் இன்பவேதனை அவனைப்படாதபாடு படுத்தியது.

விடிந்தது...

''என்னம்மான் முகமெல்லாம் இரைச்சுக்கிடக்குது!''



படிப்பகம்

www.padippakam.com

தேநீரை எடுத்து வந்து அவனிடம் நீட்டும்போது கண்ணம்மா இப்படிக் கேட்டாள்.

இறப்பிலே மாட்டப்பட்டிருந்த கண்ணாடியை எடுத்து முகத்தைப் பார்த்தான். கண்களின் கீழ் இமைப் பிறை வளைவு முருத்துக்கள் கூப்பிப் போயிருந்தன. வைரமுத்தன் சுட்டு விரலால் அந்த வீக்கத்தை உரசி விட்டான்.

இறப்பின் மூலையோடு தலைகீழாக தொங்கவிட்டிருந்த மண்வெட்டியைக் கையில் எடுத்து அதன் இருபுறமும் பற்றிப் பிடித்திருந்த தூருவைக் கால்களால் உரசிவிட்டு லாவகமாக உயர்த்தித் தோள்மேல் போட்டுக்கொண்டே இராச நடை போட்டு தோட்டத்து நிலத்தில் காலடி எடுத்து வைத்தான்.

கால்கள் குளிர்ந்தன.

அந்தக் கிழத்தைப் பார்த்து, கண்ணம்மாள், பெருமையாற் பொருமினாள்.

வெயில் நெருப்பாய் எரிந்தது. இடையிடையே மழையும் தூறியது. தூற்றலில் நனைந்து, வெயிலில் காய்ந்து கொண்டே வைரமுத்தன் யந்திரமாக வேலை செய்தான். கண்ணம்மாள் எவ்வளவோ தடுத்தும் அவன் கேட்டால்தானே! பூமித்தாய் எத்தனை இதமாக இருந்தாள்.

நல்ல நாள், ஏதாவது இன்று நட்டுவிட வேண்டுமென்று வைரமுத்தனின் மனது கூறியது.

அடுத்த வீட்டுக்குச் சென்றவன் இரண்டு தக்காளிக் கன்றுடன் வந்து சேர்ந்தான். வீட்டோடு மருவிய தோட்டத்து வெளியிலே சிறிய நீள்பாத்தி அமைத்து, மாட்டுக்கட்டையின் எருக்கும்பியில் ஒரு கடகம் எரு எடுத்துவந்து பரவிக்கொத்தி, அந்தத் தக்காளிக் கன்றுகளை நட்டு வரம்பு கட்டி, சுள்ளிகளை எடுத்து சிறிய வேலியும் அமைத்துவிட்டு வைரமுத்தன் கூனல் முதுகை நிமிர்த்தி உழைவெடுத்தான்.

''அம்மான், தம்பிக்கு வேலை கிடைச்சுட்டுதாம், பியோன் வேலைதானாம்'' என்று வாய் நிறையக்கூறிக்கொண்டே கண்ணம்மா ஓடிவந்தாள். வைரமுத்தன் நாரி நிமிர்த்தியபடி அப்படியேநின்றான். ''அம்மான் அவர் தந்தி குடுத்திருக்கிறார். தம்பிக்கு வேலை கிடைச்சுட்டுதாம்'' தந்தியை நீட்டிய படியே கண்ணம்மா மறுபடியும் கூறினாள்.

வைரமுத்தனின் பஞ்சடைந்த கண்கள் கண்ணம்மாவுக்கு நேரே குத்தி நின்றன. அந்தப் பார்வை!

இமை வெட்டாத அந்தப் பார்வை!

வைரமுத்தனின் கண்களிலிருந்து பெருக்கெடுத்து வந்த கண்ணீர் அந்தத் தக்காளிச் செடிகளில் விழுந்து சிதறின. ஏக்கத்தின் சாயை படர்ந்த அந்த முகத்தை உற்றுப் பார்த்தபடி கண்ணம்மா நின்றாள்.

இரவு வைரமுத்தனுக்கு ஜுரம் அடித்தது. அவன் ஏதேதோ பிதற்றினான். கண்ணம்மா கண் விழித்திருந்தாள். அன்று பிடித்த ஜுரம் இன்று வரையில் அந்த நிலையில் தான் இருக்கிறது.

பகலெல்லாம் அந்த விருந்தையில் கிடந்துகொண்டு அந்தத் தோட்டத்தையே பார்த்து நெடுமூச்செறிந்து கொள்வதும், இரவெல்லாம் குடிசையின் மூலைக்குள் முடங்கிக்கிடந்து முனகிக்கொள்வதும்தான் அந்தக் கிழவனுக்கு நிகழ்ச்சி நிரலாகிவிட்டது. உள்ளூர் வைத்தியர் அம்பலவாணர் தன்னால் முடிந்தவரை பார்த்து விட்டார்.



படிப்பகம்

www.padippakam.com

**படைப்பாளிகள் கவனத்திற்கு...**

தாமரைக்கு வரும் படைப்புகளில் பிரசுரமாகாதவற்றை திருப்பியனுப்ப இயலாது. எனவே படைப்புகள் அனுப்புவோர் பிரதியெடுத்துக் கொண்டு அனுப்ப வேண்டுகிறோம். கதை, கட்டுரை அனுப்புவோர் ஒவ்வொரு படைப்புடனும் சுய முகவரியிட்ட அஞ்சல் அட்டையை இணைத்து அனுப்புங்கள்.

## 5

கண்ணம்மாளின் கடிதம் கண்டதும் சுப்பிரமணியமும், கேதுவும் இரண்டாவது நாட்காலை ஓடோடி வந்து சேர்ந்து விட்டார்கள்.

எலும்பாகித் -தோலாகிக் கிடந்த வைரமுத்தனைப் பார்த்து அவர்கள் எல்லோரும் கண்ணீர் வடித்துப் பொருமினார்கள். ஆனால் வைரமுத்தன் மட்டும் அந்தத் தோட்டப்பரப்பையும் கேதுவையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டே கிடந்தான். நீண்ட மூச்சுக்கள் அவனின் நாசித் துவாரங்களில் நிறைந்து வழிந்தன.

''அப்பா மருந்து குடிங்க''

''மருந்து வேண்டாம்டா, எனக்கு ஒண்ணுமில்லையே''

''ஆஸ்பதத்திரிக்கே போய் இருப்போம் வாங்கப்பா...''

''ஐயோ உங்களை இரண்டு கையுமெடுத்துக் கும்பிடறேன். என்னை இங்கேயே வைச்சிருங்க.....''

வைரமுத்துக் கிழவன் இரண்டு கைகளையும் எடுத்து எல்லோரையும் கும்பிட்டான். அந்தப் பரிதாப வேண்டுகோளை மீறமுடியாமல் கேது விம்மிப் பொருமினான்.

இருந்தாற்போலக் கிழவனுக்கு மயக்கம் வந்துவிட்டது. வைத்தியர் அம்பலவாணர் அவசர அவசரமாக அழைத்துவரப்பட்டார். கிழவனின் நாடியைப் பரீட்சிக்கும்போது அவர் முகத்தில் ஜீவ களை இருக்கவில்லை.

சற்று வேளைக்குப் பின் பக்கத்து ஊராகிய மானிப்பாய் ஆஸ்பத்திரியின் பிரதம டாக்டர் பாலசிங்கம் அவர்கள் அழைத்துவரப்பட்டார். பதினைந்து நிமிஷங்களாகப் பரீட்சை செய்து பார்த்துவிட்டு, ''மாலை ஆறு மணிக்கு மேல் கிழவன் உயிரோடு இருக்காது.'' என்று முத்தாய்ப்பு வைத்துப் போய்விட்டார்.

கண்ணம்மா கோவென்று கதறினாள்.

மாலை ஐந்து மணிக்குள் கிழவனின் மூத்த பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் உட்பட இருபத்தைந்து பேர்கள் சூழ்ந்து நின்றனர்.

ஒரு மணி வேளைக்குப் பின் கண்பொத்த, வாய் பொத்த, குரல் வைக்க பால் வார்க்க ஆள் வேண்டாமா?

நேரம் பறந்தோடிக் கொண்டிருந்தது. ''எழுபது ஆண்டுகளுக்கு மேல் இந்த உலகத்தில் உழன்ற ஒரு ஜீவனை அழிவற்ற நித்திய உலகத்திற்கு அனுப்பி வைப்போம்'' என்று கங்கணம் கட்டிக்கொண்டு அக்கம் பக்கத்துக் கார்களும் கூடி நின்றனர். கண்ணம்மாள் அந்தக் கூட்டத்துக்கு நடுவே கலைந்த கூந்தலை அள்ளிச் செருகிக்கொண்டு



படிப்பகம்

www.padippakam.com

பரிதாபமாக நின்றாள்.

மணி சரியாக ஐந்தே முக்கால் ஆகிவிட்டது.

கிழவனின் உடம்பு இலேசாக ஆடி அசைந்தது.

கண்களை இலேசாகத் திறந்து சிரத்தைச் சரித்து நிமிர்த்தி அங்குமிங்குமாக ஏதையோ தேடினான் கிழவன். கண்ணம்மாவின் கண்களோடு கிழவனின் கண்கள் குத்திட்டு நின்றன. அதன்பின் சூழ நின்றவர்களைப் பார்த்து என்ன நினைத்துக் கொண்டானோ, கண்ணம்மாளை நோக்கி, தோட்டத்து வெளியைப் பார்க்கக் கூடியதாக நகர்ந்து இடம் விடும்படி கைகளால் சைகை செய்தான்.

கண்ணீரை முன்தானையால் துடைத்துக்கொண்டு கண்ணம்மா எல்லோரையும் விலக்கி வழிவிட்டாள். தோட்டத்து வெளி இப்போது கிழவன் கண்களுக்குத் தெளிவாகத் தெரிந்தது. நீண்டு வளர்ந்த தக்காளிச்செடிகளின் சிவந்த பழங்கள் அவனின் கண்களுக்குத் தெரிந்திருக்கவேண்டும். கண்ணம்மாளை அருகில் அழைத்து அவள் காதுக்குள் ஏதோ சொன்னான்.

விம்மல் பொருமலைக் கட்டிப் போட்டுவிட்டு, தோட்டத்துள் சென்று சிவந்துபோய்க்கிடந்த தக்காளிப் பழங்களில் இரண்டைப் பிடுங்கிவந்த கிழவனின் கைகளில் வைத்தாள் கண்ணம்மாள்.

கிழவனின் கண்கள் பிரகாசமாகின. அவதிஅவதியாக அந்தப் பழங்களைக் கடித்து மென்று சுவைத்து விழுங்கினான்.

மஞ்சள் பொழுதின் கோலம் மாறி உலகம் இருண்டு கொண்டுவந்தது.

நெய் விளக்குகள் ஏற்றப்பட்டன.

நன்றாக இருட்டி விட்டது.

கிழவனை வழியனுப்புவோர் காத்திருந்தனர்.

அன்றிரவெல்லாம் வழியனுப்புவோர் காத்திருந்தனர். விடிந்து கொண்டு வந்தது.

வழியனுப்பக் காத்திருந்தோர் அலுத்துக்கொண்டு சோம்பல் முறித்தனர்.

காலையானதும் கண்ணம்மாள் இரண்டு தக்காளிப் பழங்களைப் பறித்துக் கிழவனிடம் கொடுத்தாள்.

நடுப்பகலாகியது, சாயரட்சைபோய், மாலையும் வந்தது. மறுபடியும் நெய் விளக்குகள் ஏற்றப்பட்டன. வழியனுப்புவோர் உற்சாகமிழந்து காத்திருந்தனர். விடிந்து கொண்டு வந்தது.

காலையானதும் கண்ணம்மாள் இரண்டு பழங்களைப் பறித்துக் கிழவனிடம் கொடுத்தாள்.

நடுப்பகல் போய், சாயரட்சைகழிந்து மறுபடியும் மாலை வந்தது; மறுபடியும் நெய் விளக்குகள் ஏற்றப்பட்டன; வழியனுப்புவோர் காத்திருந்தனர்; அலுத்துக் கொண்டனர். சோம்பல் முறித்துக்கொண்டனர்.

பதினைந்து நாட்களுக்குப் பின் ஒருநாள் காலை அந்தத் தோட்டத்து வீட்டில் அழுகுரல் கேட்டது.

வைரமுத்துக்கிழவனை வழியனுப்பி விட்டு எல்லோரும் ஓய்ந்த குரல் வைத்தனர்.


அந்தத் தக்காளி செடிகள் விதவைக் கோலத்தில் மொட்டையாகி நின்றன.

*-(தாமரை ஆகஸ்ட் 1960)*



படிப்பகம்

www.padippakam.com



## நொய்யல

★ அகத்தியர் சினிமாவுக்கு
அம்மாவோடு நடந்து போகையில்
காலில் அப்பிய
கழிவை கழுவுகையில்
பாறை கிழித்த
காயம்... ஞாபகங்களில்...

★ தை மாதம் பூப்பறிக்கிற கூட்டம்
நண்பர்களோடு...
வேடிக்கை பார்க்க
கழிவின் வாடை
கொஞ்சம் ''குறைச்சலாகத் தான்''...

★ ஒரு முறை
ஊர்வல உற்சவம்
தாண்டிப் போகும்போது
தலைவர் புலம்பினார்
''தலைமறைவு காலத்திலே
ஜீவாவும் பி.ஆரும்
இங்குதான் கூட்டம்
நடத்த அடிக்கடி வருவாங்க
அன்னிக்கெல்லாம் இது மணல் மேடு
இன்னிக்கு...!

★ நேற்று
தெருவில் நடக்கையில்
''அட ஆத்து பாலத்து கேஸ்கூட
கம்பெனிக்கு வருது''
நண்பனின் வார்த்தையில்
நதியும் கிழிந்தது.

★ சாக்கடை கழுவிய
கழிவை சுமந்து
சலனமற்று
ஓடிக்கொண்டிருக்கிறது ஆறு...

- 'மலர்கள்' ராஜு



படிப்பகம்

www.padippakam.com

## திருமதி குரோட்டன்ஸ்

ஒரு நல்ல குரோட்டானாய்
என் படுக்கைக்குப் பக்கத்திலேயே
வந்திருக்கிறாய்.
நான் உனக்கு நீரிடுவதும்
நீ
என் வீட்டை அலங்கரிப்பதுமாய்
நமது ஸ்நேகங்கள்.
உன்னைப் பராமரிக்கும்
என் தாவர சிநேகிதம்
திருப்தியளிக்கிறதா?



ஆனால்
உன் உட் சுவாசங்களை
உணர்ந்து கொள்ளவே முடிவதில்லை.
உன் வேரினை
நான் தீர்மானித்த வடிவத்திற்குள்
சுருக்கிக் கொண்டதற்காக
வருத்தமேதும் இருக்கிறதா?
உன் பூப்பின் உதிரத்தை
இலைகள்மேலேயே தெளித்து
விகாரப்பட்டுக்கொள்வது விளங்கவில்லை.
உனக்கும் எனக்குமான
வேர்கள்
இடம்மாறிக்கிடப்பதில்
நீ எனக்கொரு ஆறுதலானாய்
நான் உனக்கு எப்படியோ?

– ஸ்டேன்லி



படிப்பகம்

www.padippakam.com



ஒன்றில் ஆசையிருக்கலாம்
ஒன்றில் கனவிருக்கலாம்
ஒன்றில் கவிதை
ஒன்றில் எதிர்பார்ப்பு
ஒன்றில் வாழ்வின் சுவடு
சிலதில் சிலபோல
இப்படி
இறைந்து கிடக்கின்றன
கறிக்கோழியின் சிறகுகள்
மிச்சத்தை
அது தான் சொல்ல வேண்டும்!

-ஹரணி



படிப்பகம்

www.padippakam.com

தாமரை

வாசகர்களே....

முற்றிலும் புதிய வடிவமைப்பில்,
அருமையான படைப்பிலக்கியப்
பெட்டகமாக வெளிவருகிறது.
'தாமரை'க்கு இன்றைய நிலையில் நிறையப்
பணம் தேவைப்படும் என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.
எனவே 'தாமரை' இதழுக்காக சந்தா சேர்க்கும்
இயக்கத்தைத் தொடங்குங்கள். அத்தோடு
விளம்பரங்களையும் சேர்த்து அனுப்புங்கள்.

## சந்தா விபரம்:

| | |
|---|---|
| தனிப்பிரதி | 4 ரூபாய் |
| ஆண்டுச் சந்தா | 45 ரூபாய் |

## விளம்பர விகிதம்:

| | ரூபாய் |
|---|---|
| பின் அட்டை கலர் | 5,000 |
| உள் அட்டை | 2,000 |
| ஒரு பக்கம் | 1,000 |

முகவரி: தாமரை 'நிர்வாகி'
"பாலன் இல்லம்", தி.நகர். சென்னை—600 017.

படிப்பகம்

www.padippakam.com

Regd.No. M/9140 THAMARAI
W.P.P.NO.35 TN / MS (N) 935 Regd.
As. News Paper in Srilanka





கடந்த அக்டோபர் இறுதியில் சென்னை அல்லயன்ஸ் பிரான்சிஸ் அரங்கில் 'முகங்கள்' என்னும் தலைப்பில் புகைப்படக் கண்காட்சி நடைபெற்றது.

காட்சியில் இடம் பெற்றிருந்தவை மோகன்தாஸ்.வி. வடகராவின் கேமிராப் பார்வைக்குக் கிட்டிய எழுத்தாளர்களின் முகங்கள்.

சோவியத் கலாச்சாரக் கழகத்தின் செயலாளராக இருந்த போதிருந்தே எழுத்தாளர்களின் முகங்களை தான் விரும்பிப் படிக்க ஆரம்பித்ததாகச் சொல்கிறார் மோகன்தாஸ்.

புகைப்படக்கலைஞன் என்கிற பார்வையில் எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும்புதுப்புது ஆளுமைகளையும், கம்பீரத்தையும் தருவது ஜெயகாந்தனின் முகம்தான் என்பது இந்த தமிழகம் வாழ் மலையாளத்துக்காரரின் வியப்பு.

படிப்பகம்